ஸ்ரீ சிவசுப்ரமண்யர்

பஜனைக் கீர்த்தனை.

சுப்பிராயர்

இயற்றியது.

இரண்டாம் பதிப்பு

பி. [illegible] ணி அண்டு கம்பெனி,

திருவல்லிக்கேணி, மதருஸ்.

[அணா-6

உ



விநாயகர் துணை.

வேலுமயிலுந் துணை.

சிவசுப்ரமண்யர்
பஜனைக் கீர்த்தனை.

காப்பு.

சீர்த்தல மாறுமகிழ் சேய்க்குமரன் மேற்பஜனைக்
கீர்த்தனைக ளன்பாய்க் கிளத்தவே—யோர்த்தவிசை
யஞ்சொற் பொருள்வாக் களியற் குதவுமொரு
பஞ்சக் கரக்கரிகாப் பாம்.

முருகர் துதி.

முத்திக் கருவித்தாய் முளைத்தெழுந்த சோதியையென்
பத்திக் குரித்தாம் பரஞ்சுடரைத்—தித்திக்குந்
தேனைக்கற் கண்டைத் திருவேரகத் துறையெம்
மானைத் தினம்வணங்கு வாம்.

வேல் துதி.

முச்சுடரின் மிக்கொளிவேல் முன்னான்கு தோளுடைய
செச்சையணி வேந்தன் றிருக்கைவேல்—மெச்சுபுகழ்

ஏற்றவேலன்ப ரிடுக்கணுறின் முன்வந்து
தோற்றுவே லுண்டே துணை.

மயில் துதி.

சித்திரக்க லாபமயில் செவ்வேட் கிசைந்தமயில்
சத்துருக்க ளைச்சிறித் தாக்குமயில்—மித்ரமயில்
வாகைமயில் வேகமயில் வர்ணமயில் சொர்ணமயில்
தோகைமயி லுண்டே துணை.

நவவீரர்கள் துதி.

வென்றி வாகை புனைவீர வாகுவை
வன்றி றல்வரை மார்பிள வல்லனை
ஒன்று மன்பினு வந்தலர் தூவியே
என்று மேத்தி யிருவினை மாற்றுவாம்.

சமயாசாரியர்கள் துதி.

தோணிபுரத் தருள்பெருகச் சமணிருள்சித் தெழுமிர
துணைத்தாள் போற்றி
சேணடர விசைநிறுவி புழவாரப் பணிபூண்டோன்
றிருத்தாள் போற்றி
வானுதன்மின் பாவைமனை யிரவிலான் வரப்பணித்
தோன் மலர்த்தாள் போற்றி
பாணினிய மொழியுமைபங் கன்வரையத் தமிழ்பகர்ந்
தோன் பதங்கள் போற்றி.

அன்பர்கள் துதி.

ஒப்பி றிருப்புக ழோதருண் மாதவன்
செப்பரு முத்தமிழ்த் தெய்வநக் கீரன்மா
விப்புவி போற்றும்பொய் யாமொழி யேனைய
வைப்பெரு வேலிறைக் கன்பரை வாழ்த்துவாம்.

எல்லாரு ஞானத் தெளிஞரே கேளீர்சொல்
கல்லெல்லா மாணிக்கக் கல்லாமோ—பொல்லாக்
கருப்புகழைக் கேட்குமோ கானமயில் வீரன்
றிருப்புகழைக் கேட்குஞ் செவி. (திருப்புகழ்)

திருப்புகழ் படிக்குமவர் சிந்தைவனு வாலே
ஒருத்தரை மதிப்பதிலை யுன்றனரு ளாலே
பொருப்பரை மிக்பொருது வென்றுமயின் மீதே
தரித்தொரு திருத்தணிகை நின்றபெரு மாளே. ,,

ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே ,,

மாறுபடு சூரரை வதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொரு ணீயருளல் வேண்டும்
ஆதிபரு ணசல மமர்ந்தபெரு மாளே. ,,

ஆறு முகமுண்டு பன்னிரு தோளுமுண் டங்கையினி
லேறிய வேலுண்டு வெற்றிமா யூரமுண் டேவல்செய்ய
மீறிய சிங்கந் துரைவீர வாகுண்டு வேளைக்கிங்கே
கூறிய போது வருவான் குமர குரு பரனே.
(ஆறெழுத்தந்தாதி)

செங்கே ழடுத்த சினவடி வேலுந் திருமுகமும்
பங்கே நிரைத்தநற் பன்னிரு தோளும் பதுமமலர்க்
கொங்கேதரளஞ்சொரியுஞ் செங்கோடைக் குமரனென
வெங்கேநினைப்பினுமங்கேயென் முன்வந்தெதிர்நிற்பனே
(கந்தரலங்காரம்)

காருகந்த மேனியனு மயனுங் காணுக்
கடவுளருக் குபதேச மருளு மூர்த்தி
வாருகந்த குவிமுலையா ளுமையா ளீன்ற
வளர்மணியே செழுஞ்சுடரே மயில்கடம்பா
தாருகந்த பன்னிரண்டு கையும் வேலுஞ்
சண் முகமு நின்னிருதாட் சதங்கை கொஞ்ச
சீருகந்து எனையாளு மையா வாவா
சண்முகனே செந்தில்வளர் சிவனே போற்றி. (1)

அலங்கார ரவிமதிசூழ் மலையுங் காவும்
அமிர்தநதி சுற்றிவரு மல்லி தேச
மிலங்குகின்ற மாத்தூரி னடுவே கம்பம்
எட்டிரண்டுஞ் சேர்த்துவைத்த வட்ட வீடு
துலங்குகின்ற மேல்வாசற் சுத்த வீதி
தூக்கியொரு கால்பாதந் தொந்தோ மென்று
சலங்கைபதந் தனைக்காட்டி ஐயா வா வா
சண்முகனே செந்தில்வளர் சிவனே போற்றி. (2)

நாவாலு மனத்தாலும் த்யானத் தாலு
நண்பாலுந் தமிழாலு நாடி நாடி
வா வா வா வென்றழைத்தால் மறுப்ப துண்டோ
மனதிரங்கி யடியேன்முன் வா வா சாமி
பாவாலே யுனைத்துதித்து உலகத் தோர்கள்
பவுஷு பெற்றார் யானுமுன்றன் பாதங்காணத்
தேவேயென் னையாபொன் னையா வா வா
சண்முகனே செந்தில்வளர் சிவனே போற்றி. (3)

கடம்பணிந்த புஜமிலங்க விடை தளாடக்
கரங்கள்பனி ரண்டிலங்க வயிர முத்து
வடம்புனைந்த மார்பிலங்கக் குழையி லங்க
மதிமுகமுஞ் சடைமுடியும் பளப ளென்ன

நடம்புரிந்த பதந்துலங்கச் சதங்கைகொஞ்ச
நறுமலர்கள் கமகமென நாயே னுள்ளந்
திடம்புரிந்து எனையாளு மையா வா வா
சண்முகனே செந்தில்வளர் சிவனே போற்றி (4)

நாட்டமுற்றே யுன்மீதி லன்பு வைத்து
நானழைத்தால் வருவதற்கு நாயேன் முன்னே
கோட்டையுண்டோ.வாடியுண்டோ வழிதோ ணாதோ
கூப்பிட்டாற் றமிழோசை செவிகே ளாதோ
வாட்டமுற்றே நான்மயங்க லாமோ ஐயா
மனதிரங்கி யடியேன்முன் வா வா சாமி
தேட்டமுற்றே யுன்மீதி லன்பு வைத்தேன்
சண்முகனே செந்தில்வளர் சிவனே போற்றி. (5)

கஞ்சமல ரணிந்ததிரு வுந்தி மார்புங்
காதிலசை குண்டலமுங் கையில் வேலுந்
தஞ்சமென்றோர்க் கருள்புரியு மமுத வாயுஞ்
சண்முகமு நின்னிருகாட் சதங்கை கொஞ்ச
அஞ்சலென்று வந்தடியேன் றன்னைக் காக்க
அழகான மயிலேறி அதிக மாகச்
செஞ்சதங்கை கலகலென ஐயா வா வா
சண்முகனே செந்தில்வளர் சிவனே போற்றி. (6)

தந்தையு நீ அன்னையு நீ என்னை யாளுஞ்
சற்குரு நீ யென்றழைத்தாற் றமியேன் முன்னே
வந்திதினா லுன்குலத்திற் குழ்ச்சி யாமோ
வாராம லிருப்பதற்கும் வழக்கே துண்டோ
என்றனுக்குச் சேனையுண்டோ வுனைப் பிடித்து
எளியேன்முன் கொண்டுவர வெந்தை யேசொல்
செந்தினைமுன் காத்தவள்ளி பங்கா வா வா
சண்முகனே செந்தில்வளர் சிவனே போற்றி. (7)

அப்பனே வாவாசற் குருவே வா வா
ஆறுபடை வீடுடைய ஐயா வா வா
சுப்பையா வாவாமுத் தையா வா வா
துரந்தரியாள் பெற்றெடுத்த துரையே வா வா
இப்பவா இங்கேவா வென்முன்னே வா வா
எளியேனைக் காத்தருளும் சாமி வா வா
செப்பரிய முப்பொருளே ஐயா வா வா
சண்முகனே செந்தில்வளர் சிவனே போற்றி. (8)

ஆக்கை நரம் பெலும்பு தசை யுதிரஞ் சிந்தி
ஐம்புலனு மொடுங்குமுன்னே ஐயா வுன்னைப்
பார்க்கவுமென் கண்குளிர முகங்க ளாறும்
பன்னிரண்டு கண்ணு மூன்றன் பவளவாயு
மேற்குமயி லியல்வள்ளி தெய்வ யானை
இனிவீர வாகுவே வருமே கூட
சீக்கிரமா யென்முன்னே ஐயா வா வா
சண்முகனே செந்தில்வளர் சிவனே போற்றி. (9)

அத்தனருள் பரமகுரு சாமி வா வா
அங்கயற்கண் புத்திரனே ஐயா வா வா
முத்திதருங் குமரகுரு மூர்த்தி வா வா
முத்தையா நால்வேத முதலே வா வா
பத்தர்மனத் தியானவள்ளி பங்கா வா வா
பன்னிருகை வேலவனே பரனே வா வா
சித்தர்முனி வோர்பணியுங் குகனே வா வா
சண்முகனே செந்தில்வளர் சிவனே போற்றி.(10)

(அகத்தியர் துதி.)

தேட வரிய மணியமைஞான் சேர்க்கவருக விரற் காழி, செறிக்க வருக திலதநுத நீட்ட வருக மறுகில்

விளை, யாடவருக மடியி லெடுத் தணைக்க வருக புதுப் பனி நீ, ராட்டவருக நெறித்தமுலை யமுதம்பருக வருக முத்தஞ், சூடவருக வுடற்புழுதி துடைக்கவருக வொருமாற்றஞ், சொல்லவருக தள்ளிநடை தோன்ற வருக சோதிமணி, மாடநெருங்குந் திருச்செந்தூர் வடி வேன் முருகா வருகவே, வளருங்களபக் குரும்பை முலை வள்ளி கணவா வருகவே. (1)

இறுகுமரைஞா ணினிப்பூட்டே னிலங்குமகர குண்ட லத்தை,யெடுத்துக்குழையின் மீதணியே னினியுன்முக த்துக் கேற்கவொரு, சிறுகுந்திலதந் தனைத்தீட்டேன் றிருக்கண் மலர்க்கு மையெழுதேன், செம்பொற்கமலச் சீரடிக்குச் சிலம்புதிருத்தே னெறித்துவிம்மி, முறுகு முலைப்பா லினிதூட்டேன் முகம்பார்த்திருந்து மொழி பகரேன், முருகாவருக சிவசமய முதல்வா வருக திரை கொழித்து, மறுகுமலைவாய்க் கரைசேர்ந்த மழலைச்சிறு வா வருகவே, வளருங்களபக் குரும்பைமுலை வள்ளி கணவா வருகவே. (2)

(திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ்.)

திருவடி யுந்தண்டை யுஞ்சிலம் புஞ்சிலம் பூடுருவப்
பொருவடிவேலுங் கடம்புந் தடம்புய மாறிரண்டு
மருவடி வான வதனங்க ளாறு மலர்க் கண்களுந் (கவ
குருவடிவாய்வந்தென் னுள்ளங் குளிரக் குதிகொண்ட

(கந்தாலங்காரம்.)

வேலா சரணம் விசாகா சரணம் விளங்கு தண்டைக்
காலா சரணங் கடம்பா சரண மிருகண் ணிறைந்த
கோலா சரணங் குமரா சரணங் குமரி பெற்ற
பாலா சரணஞ் சரணமென்றோதப் பயமில்லையே.

(தனிப்பாட்டு.)

கணபதி துதி.

திருப்புகழ்.

கைத்தல நிறைகனி - யப்பமொ டவல்பொரி - கப்பியகரிமுக - னடிபேணிக், கற்றிடு மடியவர் - புத்தியி லுறைபவர் - கற்பக மெனவினை - கடிதேகு, மத்தமு மதியமும் - வைத்திடு மரன்மகன் - மற்பொருதிரள்புய - மதயானை, மத்தள வயிறனை - யுத்தமி புதல்வனை - மட்டவிழ்மலர்கொடு - பணிவேனே, முத்தமிழடை வினை முற்படுகிரிதனின் - முற்பட வெழுதிய முதல்வோனே, முப்புரமெரி செய்த - வச்சிவனுறைரத - வச்சது பொடி செய்த - வதிதீர, வத்துயராதுகொடு - சுப்பிரமணிபடு - மப்புன மதனிடை - யிபமாகி, யக்குற மகளுட - னச்சிறு முருகனை - யக்கணமணமருள் - பெருமாளே.

சுப்பிரமணியர் துதி.

முத்தைத்தரு - பத்தித்திருநகை - யத்திக்கிறை - சத்திச் சரவண - முத்திக்கொரு - வித்துக் குருபர-வெனவோது, முக்கட்பர - மற்குச் சுருதியின் முற்பட்டது - கற்பித்திருவரு - முப்பத்துமு - வர்க்கத் தமரரு-மடிபேணப், பத்துத் தலை - தத்தக்கணைதொடு மொற்றைக்கிரி மத்தைப் பொருதொரு - பட்டப்பகல்-வட்டத்திகிரியி - லிரவாகப், பத்தர்க்கிர - தத்தைக் கடவிய - பச்சைப்புயன் - மெச்சித்தருபொருள் - பட்சத்துடன் - ரட்சித்தருளுவ - தொருநாளே, தித்தித் திசை - யொக்கப் பரிபுர-நிர்த்தப்பதம் - வைத்துப்பயிரவி - திக்கொக்கந - டிக்கக் கழுகொடு - கழுகாடத், திக்குப்பரி - வட்டக்கலை கொடு - சித்ரப்பவு - ரிக்குத் திகுதிகு - திக்குத் தொகு - தொக்குத்ரிகடக - மென

வோதும், கொத்துப்பறை - கொட்டக் களமிசை குக்குக்குகு - குக்குக்குத குகு - குக்திப்புதை புக்குப் பிடி யெனமுது கூகை, கொட்புற்றெழு - நட்புற்றவுணரை - வெட்டிப்பலி - யிட்டுக்குலகிரி - குத்துப்பட வொத்துப்பொரவல - பெருமாளே.

ஆறுபடை வீடுதுதி.

திருப்பரங்கிரி.

அருக்குமங்கையர் - மலரடி வருடியுங் - கருத்தறிந்தபி - னரை தனிலுடைதனை - யவிழ்த்துமங்குள - வரசிலைதடவியு - மிருதோளுற், றணைத்து மங்கையி - னடிதொரு நகமெழ - வுதட்டை மென்றுப - லிடுகுறி களுமிட - வடிக்களந்தனின் - மயில் குயில் புறவென - மிகவாய்விட், டுருக்குமங்கியின் - மெழுகெனவுருகிய - சிரத்தை மிஞ்சிடு - மநுபவ முறுபவ - முலக்கையின் கனி - நிகரென விலகிய - முலைமேல்வீழ்ந், துருக் கலங்கி மெ - யுருகிடவமுதுகு - பெருத்தவுந்தியின் முழுகிமெயுணர்வற-வுழைத்திடுங்கன - கலவியை மகிழ்வது - தவிர்வேனோ, விருக்குமந்திர - மெழுவகை முனிபெற - வுரைத்த சம்பரம - சரவணபவகுக - விதத்தவிங்கித - மிலகிய வறுமுக - வெழில்வேலான், றிலக்கணங்களு - மியலிசைகளுமிக - விரிக்குமம்பல - மதுரிதகவிதனை - யியற்றுசெந்தமிழ் - விதமொடுபுயமிசை - புனைவோனே, செருக்குமம்பல - மிசைதனிலசைவற - நடித்தசங்கரர் - வழி வழியடியவர் - திருக்குருந்தடி - யருள்பெறவருளிய - குருநாதா, திருக்குழந்தையு - மெனவவர்வழிபடு - குருக்களின்றிற - மெனவரு பெரியவ - திருப்பரங்கிரி - யுறைபவசரவண - பெருமானே.

திருச்செந்தில்.

கமலமாதும - ருந்ததியுந்துதி - செயவொணுதம-டந்தையர் சந்தன - களபசீதள கொங்கையிலங்கையி - லிருபோதே, களவுநூல்தெரி - வஞ்சனை யஞ்சன - விழியின்மோகித - கந்தசுகந்தரு - கரியவோதியிலிந்து முகந்தனின் - மருளாதே, யமலமாகிய - சிந்தையடைந்தகல் - தொலைவிலாதவ - ம்பொருளின்பமு - மடையவோதியு - ணர்ந்துதணிந்தபி - னருள்தானே, யறியுமாறுபெ - றும்படியன் பினி - னினியநாதசி - லம்புபுலம்பிடு - மருண வாடக - கிண்கிணிதங்கிய - வடிதாராய், குமரி காளிபயங்கரி சங்கரி - கவுரி நீலி - பரம்பரையம்பிகை - குடிலைகோகினி - சண்டினி குண்டலீ-ளமதாயி, குறைவிலாளுமை - மந்தரி யந்தரி - வெகுவிதாகடி - சுந்தரி தந்தருள் - குமரமூஷிக - மூந்திய வைங்கர - கணாரயன், மமவினயக - னஞ்சுமிழ் கஞ்சுகி - யணிகஜானன னின்பமெனாம்புலி - மவுலியானெருசிந்தையுகந்தரு - ளிளையோனே, வளரும் வாழையு-மஞ்சளுமிஞ்சியு - மிடைவிடாதுநெ - ருங்கிய மங்கல - மகிமைமாநகர் - செந்திலில் வந்தருள் - பெருமாளே.

திருவாவினன்குடி.

கருவினுரு - வாகிவந்து - வயதளவி - லேவளர்ந்து - கலைகள்பல - வேதெரிந்து மதனுலே - கரியகுழல் - மாதர் தங்க - ளடிசுவடு - மார்புதைந்து - கவலைபெரிதாகி - நொந்து - மிகவாடி, அரகரசி - வாயவென்று - தினமுநினை - யாமனின்று - அறுசமய நீதியொன்று மறியாம, லசனமிடு - வார்கடங்கள் - மனைகடலை - வாசனின்று - அனுதினமு நாணமின்றி -

பழிவேனே, உரகபட - மேல்வளர்ந்த - பெரிய பெரு மாளரங்க - முலகளவு - மான்மகிழ்ந்த - மருகோனே, உபயகுல - தீபவங்க - விருதுகவி - ராஜசிங்க - முறை புகலி - யூரிலன்று - வருவோனே, பாவைமனை - மீதி லன்று - ஒரு பொழுது - தூதுசென்ற - பரமனரு - ளால் வளர்ந்த - குமரேசா, பகை யசுரர் - சேனை கொன்று - அமரர் சிறை - மீளவென்று - பழனிமலை - மீதினின்ற - பெருமாளே.

திருவேரகம்.

மருவே செறித்த - குழலார் மயக்கில் - மதனாக மத்தின் - விரகாலே, மயலே யெழுப்பி - யிதமா யருத்தி - மலைபோன் முலைக்கு - ளுறவாகி, பெருகாத லுற்ற - தமியேனை நித்தல்-பிரியாதபட்ச - மறவாத, பிழையேபொறுத்து-னிருதாளிலுற்ற-பொருவாழ்வுபற்ற வருள்வாயே, குருவாயரற்கு - முபதேசம்வைத்த-குகனே குறத்தி-மணவாளா, குளிர்கான் மிகுத்த - வளர் போத முற்ற - குடகாவிரிக்கு - வடபால்வாழ், திருமால்தனக்கு - மருகாவுமைக்கொர் - சிறுவாகரிக்கு - மிளையோனே, திருவேரகத்தி - லுறைவா யரக்கர் - சிரமே துணித்த-பெருமாளே.

குன்றுதோறாடல்.

வஞ்சகலோப மூடர் - தம்பொருளூர்கள் தேடி - மஞ்சரிகோவை தூது-பலபாவின், வண்புகழ்வாரி காரி-என்றிசை வாதுகூறி-வந்தியர் போலவீணி-லழியாதே, செஞ்சரணாதகீத-கிங்கிணி நீபமாலை-திண்டிறல் வேல் மயூர-முகமாறும், செந்தமிழ் நாளுமோதி- யுய்ந்திட ஞானமூறு - செங்கனிவாயிலோர்சொ - லருள்வாயே,

பஞ்சவ னீடுகூனு - மொன்றிடு தாபமோடு-பைந்தமிழ் வாதுகூறு-சமண்மூகர், பண்பறு பீலியோடு-வெங்கழு வேறவோது - பண்டித ஞானநீறு-தருவோனே, குஞ் சர சாலைமேவு - பைம்புன மீதுலாவு - குன்றவர் ஜாதி கூடி - வெறியாடி, கும்பிடு நாடுவாழ்வு-தந்தவ ரோடு வீறு - குன்றுதோ றுடன்மேவு-பெருமாளே.

பழமுதிர்சோலை.

வேனின்மத னைந்து - பாணம்விட நொந்து - வீதி தொறுநின்று-மடவார்பால், வேளையென வந்து-தாளி னில் விழுந்து-வேடைகெடநண்பு - பலபேசி, தேனினு மணந்த-வாயமுத முண்டு-சீதளதனங்க-ளினின்மூழ்கி, தேடியதனங்கள்-பாழ்படமுயன்று - சேர்கதியதின்றி- யுழல்வேனோ, ஆனிரை துரந்து-மானில மளந்தொ- ராலிலையி லன்று-துயின்மாய, னுயர்மனை சென்று-பாற யிரளைந்த-வாரணமுகுந்தன்-மருகோனே,வானவர்புகழ் ந்து-தானவர் பயங்கொள் மாவொடு விளங்கு - மணி மார்பா,மாமறை முழங்கு-சீபுருடமங்கை-மாநகரமர்ந்த- பெருமாளே.

---

1. தோடயமங்களம் - இராகம் - நாட்டை

தாளம்—ஜம்பை.

ஜயகௌரிபதிபால ஜய தேவஹிதசீல
ஜயபக்தாநுகூல ஜய வெற்றிவேலா- ஜய ஜயா.
ஜயகுஞ்சரிநேச ஜய தேவகிரிவாச
ஜயதாச நிஜதாச ஜய ஜக தீச- ஜய ஜயா.

---

2. இராகம்-ஆரபி-தாளம்—த்ரிபுடை.

சரணம் சரணம் வேலாயுததர,
சரணம் சரவணோற்பவகுகா,
சரணம் சங்கர நந்தனுவுன், சரணந்தாருகஸம்ஹரா.
சரணம் சரணம்.

சதுர்மறைப்பொருளாகிய சிவ, சண்முகாசிகிவாகனு,
சரவணபவதாசன்போற்றிடுஞ், சற்குணவள்ளிமோகனு
சரணம் சரணம்.

---

3. இராகம்-மத்தியமாவதி-தாளம்-ஆதி.

திரிபுர மெரிபடச் சிறுநகை புரியான், செல்வக்குமாகுக
நமோ நமோ.
அரகரவெனநின்றமரர்கள்-விண்-ணமரர்க ளடிதொழும்
அறுமுக அரசே நமோ நமோ.

வேலாயுதனே நமோ நமோ நால்
வேதாகமப்பொருளே நமோ நமோ.

சரவணபவதாச னன்புடன்-மிக-அன்புடன் றுதிசெய்து
சிரமேற் கரங்குவித்துத் தினம்பரவும்

பிரணவத்தின் முடிவாகிய-முடி-வாகிய பொருளதை
அருணகிரிக்கருள்வோய் நமோ நமோ-வேலாயுதனே.

---

4. எச்சரிக்கை-இராகம்-சாவேரி-தாளம்-ரூபகம்.

1. அருமாமறை முடிவே யென-தாவிக்கொருதுணையே
திருவேரகப் பதிமேவிய-தேவே யெச்சரிகை
2. வேலேந்திய கானேபவ - ஹரனே குருபரனே
சேலேந்திய விழிமாதுமை - செல்வா எச்சரிக்கை.

3. தலையாறுடை முருகாகண்ணான்-மருகா அன்பர்க்கரு
மலைமாதொரு பங்கன்னிள-மதலா யெச்சரிகை [க

4. கரியானன முரியானிணை - பிரியாய் பரங்கிரியாய்
தருவானவர் பெருமான்மகள் - தலைவா எச்சரிக்கை

---

5. இராகம்-பந்துவராளி-தாளம்-ஆதி.

பல்லவி.

மாமயில் வேலனுக்கு மங்களம்—நான்
மறைகாணு தேவனுக்கு—மங்களம்.

அநு பல்லவி.

பூமிபுகழுந்திரு வேரகந்தனில்வளர்
சுவாமிநாதமூர்த்திக்கு மங்களம். மாமயில்.

சரணங்கள்.

(1) ஆதியனாதியாகி யருவுருவாய் விளங்குஞ்
சோதி சொரூபனுக்கு மங்களம். மாமயில்.

(2) மின்னயில் வேல்மயூரம் விளங்குஞ்சிறைச் சேவற்
அன்னையிருவருக்கும் மங்களம்— மாமயில். [கும்

(3) சரவண பவதாசன் சந்ததம் பணிந்தேத்தும்
வாசண்முகவனுக்கு மங்களம்— மாமயில்.

---

6. சச்சிதானந்த சரவணபவ தாசபூஜித ஞானசக்திதா
தாருகசூராதி தானவஸம்ஹார-ஸர்வஜீவதயாள சண்
முகா,

பாலசுந்தரகுக-பாலசுந்தரகுக-பாலசுந்தரகுகபாஹிமாம்.
பாலசுந்தரகுக-பாலசுந்தரகுக-பாலசண்முககுக பாஹி
மாம்

ப. தாருக்ரக-பங்கஜதளநேத்ர—பார்வதி வரபுத்ரபாஹி
மாம்.

ஜே! ஷண்முகமூர்த்திக்கு-ஜே!!

விக்நேச்வரர் துதி.

7. கீர்த்தனம்-இராகம்-நாட்டை-தாளம்-ஆதி.

பல்லவி.

கணநாதப்ரபோ ஜகத்ரயவிபோ - கணநாத

அனுபல்லவி.

அணிமாதி சித்தி தாயக
அமரமுனிகணப்ரணுத விக்கின விநாயக - கண

சரணம்.

கருணாநந்த சாகர லம்போதர
கஜவதன திமிர திவாகர
அருணாருண ப்ரபாகர
ஆதிமத்யாந்தரகிதநிகில சுபகர கணநாத.

பரமேச்வரர் துதி.

வெண்பா.

8. ஏன மலரடியு மேரெகின மாமுடியு
மானமுறக் காண்பான் வருந்தியே-யூனமடைந்
தெந்தாய் பிழைபொறுத்தி யென்றேத்தச் செந்த
வந்தோ னடிபரவு வாம். [மூலாய்

கீர்த்தனம்-இராகம்-காம்போதி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

அடைக்கலம் புகுந்தேனின்னடியில்
அருணைக்கிரியிற் கருணைக்கடலே

அநு பல்லவி.

கடைக்கணருள் தந் தெனையாதரிப்பாய்
கங்கைமலை மங்கைமகிழெண்கரனே சங்கரனே-அ

சரணம்.

1. பாதிப்பிறையைச் சடை முடித்தவனே
மேருக்கிரியைத்தனுப் பிடித்தவனே
ஆதிபாஞ்சுடரே யடியரை
யாண்டவனே யென்பாவம் பூண்டவனே தாண்ட
வனே அடை.

2. மீனக்கொடிமன்மதனைப் பொடித்தவனே
ஞானப்பொது முன்னடநடித்தவனே
மானுமழுவும் துடியும் காத்தில்
வைத்தவனே வித்தகனே கூற்றை யுதைத்தவனே
அடை

3. கோலநகையாற் புரமெரித்தவனே
ஆலவிடமங்களந் தரித்தவனே
சாலவாம் சரவணபவற்கருள்
தந்திமுகத் தெந்தையையுங் கந்தனையுந் தந்தவனே
[அடை.

அம்பாள் ஸ்துதி.

வெண்பா.

9. மண்ணும்விண் ணும்புனலு மாருகமுஞ் செந்தீயு
மொண் ணுபடச்சேர்த்தோ ருருவாகப்-பண்ணியவை
வந்தவா றேயழிய வைத்தாடல் செய்யுமுமை
கந்தமலர்த் தாளிணையே காப்பு.

கீர்த்தனம்- இராகம்—பைரவி-தாளம்-ஆதி.

பல்லவி.

மலையரயனுதவு மயிலேயுன்னிருபாத
மலர்நாளுஞ் சரணமம்மா—

அநு பல்லவி.

கலையுமதி மழுவுங் கங்கையும் புனையுமுக்
கண்ணன் மகிழ்மங்கையே-கண்ணன்றிருத்தங்கையே-
[மலை.

சரணம்.

1. நேம நிஷ்டைகள்செய்து, நின்றறிகிலன்றுயே
நேசம் வைத்தாள்வாய் ஜக, தீசுவரியுன்றன்சேயே
தாமதஞ்செய்யாதேயிப், பூமிதனிலே நீயே
தஞ்சம்வேறில்லையினி, யஞ்சலென்றருள்வாயே-மலை.

2. தியானஹோமஜப தர்ப்பணமறிந்திலேன்
சான்றோரல்லாருறவு பற்றுநான் பிரிந்திலேன்
ஞானமார்க்கமென்பது சற்றுந்தெரிந்திலேன்
நற்றுனதருமஞ் சொப்பனத்திலும் புரிந்திலேன்
[மலை.

3. கருணைக்கடலே நீ சற்றிரங்காயேலன்னை
கடையேனுய்யுமாறென்றறியேனே பின்னை
தருணத்துதவுங் கற்பதருவாகியபொன்னை
சரவணபவதாசன் சரணம் சரணம் சொன்னேன்
[மலை.

கீர்த்தனம்-இராகப்-பூரி கல்லியாணி-தாளம்-சாப்பு.

பல்லவி

இன்னமன முனக்கிரங்கவில்லையோ—தாயே
ஏழையெனைக் கடைக்கண்பார்த்தென்றுயர் தீர்த்தாள-
இன்னமுன

அனு பல்லவி

பொன்னஞ்சிற கன்னம்பயில்-கம்பைநதிசூழும்
பூமி புகழ்கஞ்சி-காமாட்சி-கடாட்சிக்க - இன்ன

சரணங்கள்.

1. உம்பர்குறை தீர்க்கவந்த ஓங்காரி றீங்காரீ
உத்தமி நாற்பத்து முக்கோணத்திடை நிலைத்தவளே
அம்புவியிலுன்னையல்லா லாரெனைக்காக்கவல்லார்
ஆதரித்தருள் அரிசோதரி - இன்ன

2. கையில் கருப்புவிலுமைங்கணை பாசாங்குசமும்
கருணைநிறைந்த கடைக்கண்ணுமந்தகாசமும்
செய்யமாதளம்பூவிற் சிறந்த திருமேனியும்
தேவீயநுதினமுஞ் சிந்தித்துயான்றொழுதேன்-இன்

3. அன்னைபராமுக நீ செய்தால் நானுய்வேனோ
அம்பிகையேநின் பொற்பதம் நம்பினேனம்மா
தன்னேரதிகமில்லாச் சங்கரவ சங்கரியே
தாசன் சரவணபவன்றனுன்னடிமை யல்லோ - இன்

முருகர் துதி.

வெண்பா.

10. பாடவறி யேன்பொல்லாப் பாவியே னின்பதத்திற்
கூட வறியேன் குணமிலேன்—தேடரிய

பொன்னே மணியே பொருந்துசுவை வானமுதே
மன்னே வடிவேல வா—

கீர்த்தனம்-இராகம்-பியாகடை-தாளம் ஆதி.

பல்லவி.

உன்றனைப்பாடவரம் உகந்தருள்வாய் வேலா

அநுபல்லவி.

குன்றந்துளைத்தநெடுங் கூர்வேலணியுமெங்கள்
குமாகுருபரனே அமரபயஹரனே - உன்றனை.

சரணம்.

எழுத்துச் சொற்பொருள்யாப், பெழிலணியறியேன்
இன்பநல்குஞ்சுருதி இசைலயந்தெரியேன்
பழுத்தகருணைக்கனி, பயக்குமைந்தருவே
பாலன் சரவண பவதாசனுனும் - உன்றனை.

வேல் துதி.

வெண்பா.

11. வெற்றிவேல் நித்தவேல் வெஞ்சூர்க் குலமுழுதுஞ்
செற்றவேல் மாவைச் சிதைத்தவேல்-முற்றுங்
கதிபெறவே யன்பர்களைக் கைதூக்கி யாளுந்
துதிபெறுவே லுண்டே துணை.

கீர்த்தனம்-இராகம்-கல்யாணிதாளம் அடதாளசாப்பு.

பல்லவி.

வெற்றிவேலுற்றதுணையே அடியேனுக்கு
வெற்றிவேலுற்றதுணையே.

அனு பல்லவி.

வெற்றிவேலுற்றதுணை, யெத்திசையும் பணியுஞ்
சத்தியுமையாள்பெற்ற, கர்த்தன் கையிலணியும்-வெற்.

சரணங்கள்.

1. தையல் குஞ்சரி வள்ளி, தம்முடனே துலங்கும்
வையகம் போற்றுமுரு, கையன் கையிலிலங்கும்.
வெற்றி.

2. சூரபத்மன் குலத்தை, வேருடனே யெரித்த
போரூரில் வாழுமெங்கள், புனிதன்கையிற்றரித்த
வெற்றி.

3. வன்னமாமயில் மீதில், மகிழ்ந்தெந்நாளும் வளரும்
தன்னிகரில்லா வேலன், தன்கரத்திலொளிரும்- வெ

4. சரவணபவதாசன், பரவித்தினந் துதிக்கும்
குருபரகுகன் திருக், கரந்தனிலே கதிக்கும். (வெற்)

மயில் துதி.

வெண்பா.

12. அஞ்சிறைத் தோகைவிரித் தாடமயி லன்பர்குழாம்
நெஞ்சி னினைக்குமுன்னோர் நிற்குமயில்-வெஞ்சூர்க்
குலங்கலங்கச் சீறுமயில் குன்றெறிந்தோ னூர்ந்து
துலங்குமயி லுண்டே துணை.

கீர்த்தனம்-இராகம்-சாவேரி-தாளம்-ஆதி.

பல்லவி.

வந்துநின்றாடுமயிலே, என்றன் முன்னே
வந்துநின்றாடுமயிலே.

அனு பல்லவி.

கொந்தலர் குழல்வள்ளி, குஞ்சரியிருவருடன்
எந்தை முருகேசனே நீ, இக்கணமெடுத்துக்கொண்டு.
[வந்து.

சரணங்கள்.

1. சுந்தரப் பொற் சிறை வீசியே, அசைந்தசைந்து,
தோகை விரித்துத்துதிபேசியே,
அந்தணர் மறைகள்பாட, அமரர்கண்டுகொண்டாட
சிந்தைமகிழ்ந்தன்பர் கூட, தித்தோந் ததிங்கிண
தோமென வந்து.

2. அரவங்கள் திடுக்கிட்டோடவே-சுதிகலங்கி
ஆதிசேடனும் வாடவே
வெருவித்திக். கஜமடங்க-பருவரைகள் நடுங்க
நிருதர்குல மொடுங்க-நித்தந்தத்திமி தோமென
[வந்து.

3. இருவிசும்பதிரக் கூவியே-யகமகிழ்ந்து
எண்டிசைகளுந்தாவியே
சரவணபவதாசற்கு-ஸாயுஜ்யபதம் இதோ
தந்தோம், தந்தோம், தந்தோம், தந்தோமென்
றனுதினம். வந்து.

ஸரஸ்வதி துதி.

விருத்தம்.

13. கலையறு பத்து நாலுங் கருணையங் கடைக்க ணோக்கின், நிலைபெற வுணர்த்தி ஞான நெறியுயிர்க் களித்துச் செங்கைத், தலம்வட மேடு வீணை தாங்கி வெண் கமல மேய, நிலவெழு தவள மேனி நிமலையை வணக்கஞ் செய்வாம்.

கீர்த்தனம்—இராகம்-மாஞ்சி-தாளம்-அடதாள சாப்பு.

பல்லவி.

தாயே யென்னாவில் வீற்றிருப்பாயே-செந்
தமிழ் மாரி பொழியக் கண்பார்ப்பாயே.

அநு பல்லவி.

நீயன்றி யெனையாள்வ தாரினி-தாயே
நிகில லோகஜநநி, கீர்வாணீ.

சரணம்.

1. அல்லும்பகலு முனைப்போற்றவுந்-தாயே
அநவரதம்பணிந்தேற்றவும்
"கல்லுஞ்சொலாதோகவி" யென்றகம்பன்மொழி
[யைக்
கடைப்பிடித்துன்றன் பதம் அடைக்கலம்புகுந்தேன்
யான் - தாயே.

2. வெண்படிக நிறமேனியுந்-தாயே
வீணை யேந்தி விளங்கும் பாணியுந்
தண் கமலச் செஞ் சீரடியு மன்பாய்ச்
சந்ததந்தியானிப்பேனென்றன்மேற் கிருபைகூர்ந்து
தாயே.

3. துடியிற் சிறந்திலங்கு நுண்ணிடையும்-தாயே
தொல்வேத உபநிடதப்படையும்
கடிகமழ்வெண் கமலத்தவிசும் வடமும்
கருத்திற் சரவணபவ னிருத்தித் துதிசெய்வேன்-
தாயே.

வெண்பா.

14. ஒருகான் முருகாவென் றோதக் கலிபோ
மிருகாற் கிருவினைக ளேகு—மருவியே
முக்கான் மொழியுங்கான் முத்திதரு மித்திரத்தா
லெக்காலுஞ் சொல்லே வினி.

கீர்த்தனம்-இராகம்-எதுகுலகாம்போதி-தாளம் - ஆதி.

பல்லவி.

முருகேசா முருகேசாவென,
மொழிந்திடு நீ மனமே—எமன்
வருகாமுன் னுமைதந்தருளும்
மைந்தனையே தினமே. முரு.

அனு பல்லவி.

திருவேரகந்தனில் மேவிய,
செல்வனை படிபணிந்து—நம்
மிருமா வினைக்கொருமருந்து வே,
றிலையென நீ துணிந்து. முரு.

சரணங்கள்.

1. நாளை நாளை யென்று வீணிலேயுனது
நாளைக்கழியாதே—இரு
வாளையொத்த கண்ணாளை நம்பியவள்
வஞ்சத்திலழியாதே. முரு.

2. எந்தவேளையி லந்தகன் வருவா,
னென்பதை யறியாயே—என்றுந்
தொந்தமாகிவரும் பந்த பாசத்தைத்,
துணித்திடக் குறியாயே. முரு.

3. கண்கள்பஞ்சடைந்து பெண்கள் பிள்ளைகள்
கதறியே யழுமுன்னே-மிகப்
பங்கப்பட மனையாளங் கங்குலைபவே
பதறியே விழுமுன்னே முரு.

4. நரை திரை வந்தையன்நாமஞ்சொல்லவே
தெரியாததன்முன்னே-மண்
டெரியிலிட்டுடலஞ் சுடலை தன்னிலே
கரிபாவதன் முன்னே முரு.

5. சரவணபவதாசன் பாவித்துதிக்குமுத்
தமிழ் தனையேபாடி—நாளு
மிரவும்பகலுஞ் சிவகுருபரனடியினி
லேகமனதாய்க் கூடி முரு.

வெண்பா.

15. அங்கஞ் சிலிர்ப்ப அருவிவிழி யூற்றெடுப்பச்
செங்கைபிரண் டும்முடிமேற் சேர்ந்தேற—நின்
யானந்த வாரி யழுந்தி வடிவேலா (கருணை
நானெந்த நாளுப்பு நாள்.

கீர்த்தனம்-இராகம்-உசேனி-தாளம்-அடதாளம்.

பல்லவி.

வீணாள்கள் போக்கினையே-
ஐயையா ஓபேதை ஓபாவி.

அனுபல்லவி.

வாணாள் முழுதுந்திரு வேரகந் தனிலுமை
மகனே, குகனே, ஷண்முகனே என்றுரையாமல்—வீ

சரணங்கள்.

எண்பத்து நாலுலெக்ஷம் (3) ஜன்மத்திலேமிக
வற்றமாமானிடம் பெற்றும்
கண்காது நாக்கையன் கருணையினாற் பெற்றும்
கந்தா, வந்தா, ளனே, யெந்தா யென்றுரையாமல்—வீ
நல்லறிவளித்ததைகேபெ - (3) அறிந்தும் நீ உன்றனக்கை
நன்குமதிக்கிலேயே [யன்
வல்லசூரன் குலத்தை மடித்த செந்தூரனைமால்
மருகா, முருகா, வள்ளிக், கருகா வென்றுரையாமல்—வீ
கருணையங்கடலாச்சுதே - (3) ஷண்முகநாதன் - ஐயா
கருத்தில் தோன்றாமல் போச்சுதே [வீதுன்றன்
தருணத்துதவுங்கற்ப தருவாங்குகனைச் சிவ
சயிலா, மயிலா, கூ, ரயிலா வென்றுரையாமல்—வீ
எல்லாவினையுந் தீருமே - (3) எல்லாப்பொருளும்
எளிதிலுன்கையிற் சேருமே
வெல்லாக் கொடும்பகையும் வெல்லுந்திறமுண்டாமே
வேலும், மயிலும், மயில், வேலும் என்றுரையாமல்-வீ

கீர்த்தனம்-இராகம்-இந்துஸ்தான் காபி-தாளம்-ஆதி.

பல்லவி.

எடுத்தும் பலனில்லையே—ஜன்மம்

அநுபல்லவி.

அடுத்துஷண்முகபா, தாம் புஜசம்வாய்
மடுத்துண்டு பிறவியை,
மாற்றிக்கொள்ளாவிட்டால். (எடுத்தும்)

சரணம்.

1. வண்டார் குழலின் மாதர், கண்டார்சொலின் மயல்
கொண்டவர்க்கேகிதர், தொண்டுசெய்திருந்தால். ()

2. சொற்பனம்போலவே, தோன்றிமறையுமிந்தக்
கற்பிதவுலகமே. கதியென்றிருந்தால். (எடுத்தும்)

3. எழுவகைத்தோற்றத்தின்கண், பழுதற்றமானிடத்
தின், விழுமிதங்கண்டறிந், தொழுகாவிடிலையோ(எ)

4. இப்பிறவிதப்பினு, லெப்பிறவிநேருமோ
முப்பொழுதுங்குக, னைப்புகழாவிட்டால் (எடுத்)

5. சாலவுயிர்களலங், கோலமானதறிந்தும்
வேலாவெனைக்காவென், ருேலமிடாவிட்டால் (எடு)

6 சாற்றுநறுமலர்கொண், டேத்திமுருகனடி
காற்ருேடுங்குமுன்னே, தூற்றிக்கொள்ளாவிட்டால்.

7. சரவணபவதாசன், பாவும்பன்னிருகர
முருகனைநினைந்துநெஞ், சுருகாவிடிலையோ (எடுத்)

வெண்பா.

19. என்றென் மனக்கவலை யேகுமோ வஞ்சநெடுங்
குன்றந் துளைத்ததனிக் கூர்வேலா—மன்றற்
பனிநாண் மலர்க்குழலாள் பாவை வள்ளிகாந்த
இனியார்துணை யெற் கியம்பு.

இராகம் - கமாசு - தாளம் - ஆதி.

பல்லவி.

ஆவினன்குடி தனிலுறைபவனே - எனை
யடிமை கொண்டாளுந்திரு - ஆவினன்குடி

அநு பல்லவி.

மூவுலகோரும்வெகு ஆவலுடனேபணிந்
தேவல்புரியச் சிறைச் சேவலம் விருதேந்தி (ஆவினன்)

சரணங்கள்.

1. எத்தனை ஜென்மமானெடுத்திப் படித்தவிப்பனை
அறியேன், சிறியேன் - இந்த
ஏழைமீதினுனக்கென்று கிருபைவருமோதெரியேன்
சத்துருசங்காரவடி வெற்றிவேலணியு மெங்கள்
கர்த்தனே சுவாமிநாதனே நித்தமுன்பதஞ்சரணம்.
2. வண்ணமாமயில் மீதினில் மகிழ்ந்தேறி யென்றன்
முன்னே, வருவாய் குருவாய் - வந்தென்
வல்வினைதீர்த்துன்றன்மருமலர்ப்பதந்தனைத்தருவாய்
எண்ணரியகோடியன்பர் பண்ணுந்தவத்திற்குவந்து
தண்ணிருளளித்திடுங்கா, ருண்ணியனேபுண்ணிய
னே (ஆவினன்)
3. வடிவின்மிகுத்தவுமை மடியிற்றவழிளைய
மகனே, குகனே - உன்றன்
மைந்தன்சரவணபவன் சந்ததம்பரவும்ஷண்முகனே
கொடியிடைப்பிடியன, மடநடைக் குறமினைக்
கூடியாடிக் கொண்டாடித் தினமகிழும் (ஆவினன்)

வெண்பா.

20. இன்ன மனமிரங்க வில்லையோ வேழையின்மேற்
பொன்னஞ் சிறைமயிலா போரூரா-மின்னற்
கொடிநே ரிடையின்சொற் குஞ்சரிதோ டோயும்
படிபுகழ்வே லாவெனைக்கண் பார்.

இராகம் - செஞ்சுருட்டி - தாளம் - ஆதி.

பல்லவி.

கதிர்வேல் முருகையா
கடைக்கண்பார்த்தருளா செய்யாய்,

அனு பல்லவி.

சதுர்மாமறைப்பொருளே சரணமன்பர்க்கருளே
இதமாய்ப்போக்குமென்மன விருளே - கதிர்

சரணங்கள்.

1. ஆனந்தரூபா - அடியவர்க்கனுகூலா
வரமுதவுமெங்கள் வடிவேலா (கதிர்)

2. மருமலர் நீபத்தாரா - வண்ணமாமயில்வீரா
செருவிற்சூரனைவென்ற தீரா (கதிர்)

3. செம்பொற் குண்டலக்காதா - சிறியன்மேலென்ன
வாதா, நம்பினேனுனை சுவாமி நாதா (கதிர்)

4. கொஞ்சுஞ்சதங்கைத்தாளா குவவும்பன்னிருதோளா
வஞ்சிகுறவள்ளி மணவாளா (கதிர்)

5. மருவும்பழனி வாசா - வள்ளன்மேலே பவநாசா
சரவணபவதாசன் தமிழ்நேசா. (கதிர்)

வெண்பா.

21. பந்தவினை தன்னாற் படியி லடியேனுக்
கெந்தவினை வந்தெய் திடினுமே - யெந்தாய்
துறவே னினைத்துதிக்கச் சொப்பனத்து நின்றாள்
மறவேன் வடிவேல வா.

இராகம்-எதுகுலகாம்போதி-தாளம்—அடதாளசாப்பு.

பல்லவி.

இனிநான்மறவேனே-என்சுவாமி நாதனை இனி

அனு பல்லவி

பனிநாண்மலர்த்தாரணி பன்னிருதோளனை
கனைகழலஞ்சிலம்பு கலிக்கும் பொற்றாளனை இனி

சரணங்கள்.

1. பங்கயனைச்சினந்த கங்கைக்கொரு பாலனைச்
செங்கைவேலேந்துங்குற, மங்கைவள்ளிலோலனை (இ)
2. தேவர்குறைமுடித்தே செந்திற்பதியையாளும்
மூவரோருருவான முன்னோன்பதத்தைநாளும். (இ)
3. சரவணபவதாசற் கருளுமான்மருகனை
ஆகரவென்றிமையோர் பரவும்வேன்முருகனை. (இ

வெண்பா.

22. செய்ய சடையுந் திருநீறு முப்புரியுங்
கையிற்றண் டும்மரையிற் கௌபினமு-முய்ய
வடியார்க் கருளு மடிமலருந் தோன்ற
வடிவேலா வென்முன்நீ வா.

கீர்த்தனம் - இராகம் - வாளி - தாளம் - ஆதி.

பல்லவி.

வா வா வா வா வா வா முருகா
வந்தென் கலிதீர்ப்பாய் - மிக
வருந்து மிந்தச்சிறியன்றுயருன்
மலர்க்கண்ணாற் பார்ப்பாய்.

அநு பல்லவி.

1. பூவினறு மணம்போலும் பாலிற்
பொருந்துஞ் சுவைபோலும் - இந்த
மூவுலகதனிலுமேவி விளங்குமெய்
முதலே கிருபைகூர்ந்து (வா வா)
2. பாலசூரியன் கோடியுதித்தாற் போலுன்
பங்கஜ முகந்துலங்க - எழில்
நீலவர்ண மயில்மேலென்னன்னையர்
நிறைந்திருபா லிலங்க (வா வா

3. செங்கையில் வேலாயுதமுஞ் சிறந்த
சேவற் கொடியுடனே — முன்
புங்கவர் சிறைதவிர்த்தங்கவர்க் கருள்புரி
பூங்கடம் பணிமார்பா (வா வா)

4. சுந்தரப் பொன்னர விந்தமலராமுன்
துணையடிசிரமேற்றி - அன்பாய்ச்
சந்ததமுனைத் துதிசெயுஞ் சரவணபவ
தாசன் றமிழ்க்கிரங்கி. (வா வா)

வெண்பா.

23. கந்தா வுனக்கோர் கடனுண்டு கேளென்றன்
சிந்தா குலமுற்றுந் தீர்த்தாளல் - வந்தெனக்குன்
காட்சி கொடுத்தல் கனைகழலி னன்னிழற்கீ
ழாட்சி கொடுத்தலு மாம்.

கீர்த்தனம்-இராகம் - ஆநந்த பைரவி - தாளம்-ரூபகம்.

பல்லவி.

முருகையனைக்ருபை தருமெய்யனே.

அநு பல்லவி.

மருமலர்ச்சோலை சூழும்போரூரில் வாழ்
வண்டார்குழலுமை மைந்தனே
தண்டாயுதநங் கந்தனே. (முரு)

சரணங்கள்.

1. எத்திசையும் புகழுந்தேதத்துவம்பொருளாதனே
ஈசனயன்மாற்கரிய மெய்ப் போதனே
பத்தர்க்கிரங்கியாளும் சுவாமி நாதனே
பசும்பொற்குழையணி முருகனே
விசும்பிற்கிறைவனன் மருகனே (முரு)

2\. கொங்கலர் நீபத்தொடையில் விசுவாசனே
கோழியங் கொடியேந்துங் குமரேசனே
மங்கை தெய்வானைக்கிசைந்த பிராணேசனே
வாடிக்குற மடமானைத்,
தேடிப்புனமிசை யோடிய (முரு)

3\. சித்ரக்கலாப மயிலேறும் வீரனே
சென்றுசூர் வேட்டையாடு மதிதீரனே
சத்ருசங்கார ஒப்பார கெம்பீரனே
சரவணபவகுக வேலனே
பிரணவ மருள்புரி சீலனே (முரு)

வெண்பா.

24\. இந்தப் பிறவி யெடுக்க முடியாது
சந்தப் பெருவரைத்தோட் சண்முகா-சொந்தமதாய்
நின்றாட் செழுமலர்த்தண் ணீழலிலேவைத்தென்னை
யென்றாள் வதுகொல் வியப்பு.

இராகம் - முகாரி - தாளம் - அடதாள - சாப்பு.

1\. ஆவியுடல் பொருளனைத்து முன்றன்
அடைக்கலம் அறுமுகனே - இந்தப்
பாவியேன் செய்பிழை யனைத்தும்
பொறுத்துப் பாதுகாத்தருள்வாயே.

2\. எத்தனைகோடி ஜென்மம் எடுத்ததோ
இனிஜென்மம் எத்தனையோ - உன்றன்
பத்தனை பவப்பிணி யணுகா தினிமேற்
பாதுகாத் தருள்வாயே.

3\. மாதர்களாசையில் மயங்கினதையோ
வாயாற் சொல்லப்போமோ - அந்தப்
பாதகமயலென்மேற் படாதினிமேற்
பாதுகாத் தருள்வாயே.

4. சுக்கிலஞ் சுரோணிதந் தோயுமிச்சடலந்
தொலையு முன்னுனைக்காணும் - ஓர்
பக்குவமறியாப் பாமரனெனையும்
பாதுகாத் தருள்வாயே.

5. இருவினைத் துன்பத்தி லிளைத்து நான்
மெலிந்தேனினி முடியாதென்றால் நல்ல
பருவமறிந்தோர் வாய்மொழிபகர்ந்து
பாதுகாத்தருள்வாயே.

6. சரவணபவதாச னன்புடனுன்றன்
தண்மலர்ப்பதந்தழுவ - சிவ
பரமஞானகுருவாய் வந்தளிபணைப்
பாது காத்தருள்வாயே.

வெண்பா.

25. செங்கமல வேதன் றிருமால் புரந்தரனும்
புங்கவரும் போற்றுமெழிற் போரூரா - திங்கட்
சடையான் மகிழ்ந்தருளுஞ் சண்முகா வேலொன்
றுடையாய் நின்றாளே யுறவு.

இராகம் - சுருட்டி - தாளம் - அடதாளம்-சாப்பு.

பல்லவி.

பத்தர்க்கு மெய்யா - பன்னிருகையா

அநு பல்லவி.

சத்துருசங்கார குமார முத்தையா (பத்தர்க்கு)

சரணங்கள்.

1. செங்கண்மான் மருகா - தெய்வானைக்கருகா
எங்கள் குறைகள் தீர்க்கும் ஏரகமுருகா (பத்)

2. சங்கரிமகனே - சரணம்ஷண் முகனே
கொங்கலர் குழல்வள்ளி கோமானேகுகனே (பத்)

3. ஆவினன்குடியாய் அடியவர்க்கெளியாய்
சேவலங்கொடியேந்தூர் திகழ்மணிமுடியாய் (பத்

4. நறு நீ பத்தரா நளின வொய்யாரா
சிறுபிறையணி யீசன் செல்வச் சிங்காரா (பத்)

5. சுரர்தொழும் வேலா சூர்க்குல காலா
சரவணபவதாசன் றமிழக்கனுகூலா. (பத்)

வெண்பா.

26. அந்திவண்ணன் றேண்மே லணைத்து மனமகிழுஞ்
செந்தில் வண்ணத்தோகைமயில் சேவகா—முந்தி
வேலைக் கரம்பிடித்த வித்தகா சேர்ந்தமுத்தி [வடி
நாலை யெனக்கு நீ நல்கு.

தண்டகம்-இராகம்-யமுனா கல்யாணி-தாளம்-ஆதி.

1. தவநெறியறியாப் பேதைமனமே
உன் ஜன்மசாபல்ய மாவதென்றோ-இந்த
பவசாகரக்கொடும் பாசவினையகற்றி
பரமசுகமடைவ தென்றோ.

2. நீர்மேற்கு மிழியாக்கை நிலையாமையிது
நிச்சயஞ் சொன்னேனறி-இப்
பாரில் நமன்வருநாள் தோவரிததற்குள்
பரிந்துகைப்பிடி நன்னெறி.

3. வாழ்வானது மிகவாழ முறுங்கடலில்
வடிவுறு நெடுந்திரை கண்டாய்-இதைத்
தாழ்வென்றுன் மனதினிற் சற்றுமெண்ணமற்
றளராமகிழ்ச்சி நீ கொண்டாய்.

4. மண்டலத்திலனேகர் மன்னர்மன்னராகி
வளர்பெருஞ்செல்வங் கைக்கொண்டார்-அவர்
கண்டபயனேதென்று கருதிடிலவருண்டு
கண்ணுறங்கி யுயிர்விண்டார்.

5. பெண்ணாசை யெனும் பேயின்வலைக்குட்பட்டு
ப்ரமிக்காதே நீ மனமே-இம்
மண்ணில நேகரிம் மாயையிலுழன்று
மடிந்தாரென் றறிகனமே.

6. உற்றூர் பெற்றூ.ருறவினரெல்லா
மூரின்மயான மட்டன்றோ-நன்றாய்க்
கற்றறிந்த பெரியோருரை நாளுமுன்
கருத்தில்வைத்திட நலமன்றோ.

7. சொன்னதெல்லா நன்றாயுணர்ந்தாயானாற்
சொரூபஞானத்தைக் கண்டாய்-உனக்
கென்னதேவையினிமனமே உலகினி
லெல்லாவினையு நீ விண்டாய்.

8. கடையா யொருமொழி கூறுவனீயிதைக்
கருதிநடப்பதே நியாயம்-என்றுந்
தடையின்றிச் சரவணபவதாசன் றொழுஞ்
சண்முகனடியில் வை நேயம்.

வெண்பா.

27. "வேலு மயிலும்" விருப்போ டுரைப்போரெக்
காலுங் கொடுங்கூற்றைக் காணுரே - சாலவே
வேண்டும் வரம்பெறுவர் மேதினியி லேயவருக்
கியாண்டு மிடும்பை யில.

கீர்த்தனம்-இராகம்-கானடா-தாளம்-ஆதி.

பல்லவி.

வேலாவென்றாற் போதும்—ஜன்மமீடேற
வேலாவென்றாற் போதும்.

அநுபல்லவி.

வேலன் உமைபயந்த பாலன் அன்பருக்கனு
கூலன் அசுரகுல காலன் சல்லோலன்றனை வேலா.

சரணங்கள்.

1. வேதன் பரவுமலர்ப் பாதன் பன்னிருகுழைக்
காதன் நவரச சங்கீதன் விநோதன்றனை வேலா.
2. கீரன் றனக்கருளு தாரன் கடப்பமலர்த்
தாரன் சூரனைக்கொன்ற வீரன் குமாரன்றனை-வேலா.
3. ஈசன் பழனிமலை வாசன் குறவனிதை
நேசன் அடியார்பவநாசன் உல்லாசன்றனை - வேலா.

வெண்பா.

28. வண்ண மயிலும் வடிவேலும் வாரணமுந்
திண்ணமதாய் நிற்கவென்றன் சிந்தையிலே - மண்
பெறற் கரிதியாது பேசுங்காற் கானக் [ணிற்
குறக்கொடிமன் னுவடியேற் கு.

சங்கராபரணம் - ஸ்வரஜாதி-தாளம் - ரூபகம்.

பல்லவி.

வடிவேலவா வரமருள வந்தருள்

அநுபல்லவி.

படிமிசையடியார்கள் பங்கிலுறை தெய்வமே
அடியேனை யாதரித்தாள இதுசமயம்.

1. ரீரீ - ரிகம - பஸா - பாமகரிஸ
ஏழைக் - கிரங்கிடுவாய் - ஏதுமறியேன்
ஸரீகமப - ரீகாமபத - காமாபதநி - மாபாதநிஸ
எந்தாயினிது - வந்தேயுனது - செந்தாமரைப்ப
தந்தாதருணம்.
நிக்கரி - நிர்ரிஸ - நிஸ்ஸநி - பதநி
இக்கண - மிக்கவ - நுக்ரகம் - செய்திடும்.
ஸாதபம - பாமகரி - காரிஸநி
ஈசனெடு - மாலயனும் - பேசரிய. வடி.

2. மாமா - பமகரி - ஸரிகா - ரிப்பமகஸரிக
பாலன் - மனக்குறையனைத்தும்-நீக்கியருள் குகவுன்
பாப - மகரிஸரீ - ரிகமரிகஸரிக - மாமா
பாத - மலர்த்துணையை — அனுதினமு மறவேன்
மகரிஸ - பமகரி - தபமக - ஸநிதப - [பாலன்.
மகரிஸ - நிஸரிக - மாமா
பரமனுக் - கருமையா - யொருமுறை - பிரணவ
மூரைதரு - குருபர - பாலன்.

3. பா - தபமமா பமககா - மகரிஸா - ரிகமபா
ஆ - சிறுவன்மேல் - வருமமா - தருமமா- பெருமை
மதப — ஸநிரிஸ - பதநிஸ [யா.
அழகா - உனக்கிது - அறிகிலன்.
பாமகரிஸ - தாநிஸரிக - மாமா
ஆர்துணையிந்தப் — பாரில் வருந்தும் - பாலன்.

4. ஸா நிதப மகரி கமபா - ஸாரிகமபதநி
வேறுதிக்கிங்கெனக்கில்லையயா - மேதினியிலேயினி.
ஸாரிக கரிஸ - நிஸரி - ரிஸநி
விண்ணவர் முனிவர் - மண்ணவர் பணியும்.

தா நிஸ ஸநித - பகம பதநி
அண்ணலேயுனது - ஸந்நிதி யடைந்தேன்.
ஸரிஸ - நிஸநி - தநித பதப
விரைவி - னிருத - ரழியப் - பொருத.
மபம - கமக - ரிகரி — ஸரிக - மாமா
சரவ - ணபவ - முருக - சரணம் - பாலன்.

வெண்பா.

29. ஆறு முகனே யயினெடுவே லாயுதனே
தேறுமறை தேடரிய தேசிகனே-நாறுமலர்
நீபத் தொடையானே நீணிலத்தி னேர்ந்துவரு
மாபத்த கற்றி யருள்.

கீர்த்தனம்-இராகம்-மோகனம்-தாளம்-ஆதி.

பல்லவி.

சண்முகா உனை நம்பினேன்-ஓம் சரவணபவ குக
சண்முகா உனை நம்பினேன்.

அநுபல்லவி.

சண்முகா வுனை நம்பினேன்
தண்ணருள் தந்தெனை யாள்வாய்
விண்ணவர் பணியும் என்றன் கண்மணியே
உண்மை யுண்மை சண்முகா.

. சரணங்கள்.

1. திக்கு வேறில்லை யென்றுன்றன்
பக்கம் வந்தேன் க்ருபை செய்வாய்
முக்கணரன் பெற்றெடுத்த
முருகா அரிமருகா-சண்முகா. சண்.

2\. எத்திசையும் புகழ்பெற்ற
உத்தம சற்குண சீலா
சித்தம்வைத் தன்பரைக்காக்கும்
சத்துரு சங்கார வேலா சண்.

3\. கோலமாமயின் மீதோங்கும்
குறமகள் ப்ராணநாதா
பாலன் சரவணபவன் பணியு
மம்புயப் பாதா. சண்.

வெண்பா.

30\. ஐம்புலனுந் தித்திக்கு மானந்தத் தாட்டுவிக்குந்
தென்புலஞ்சே ராக்கதியிற் சேர்க்குமே—இன்ப
மருவே செறித்தவெழில் வண்டாற்றுஞ் சோலைத்
திருவே ரகத்துறையுந் தேன்.

கீர்த்தனம்-இராகம்-தோடி தாளம்-ரூபகம்

பல்லவி.

மருந்தைக் கண்டேனே—உடனே
அருந்திக் கொண்டேனே.

அநுபல்லவி.

அருந்தவம் புரிந்தமரர் முனிவர்
அரியயன் முதலார்க்கு மரிய. மருந்தை.

சரணங்கள்.

1\. வெள்ளிமலையில் முளைத்த மருந்து
மேருமலையில் தழைத்த மருந்து
தெள்ளிய நீரிற் செழித்த மருந்து
தேவர்துயர மொழித்த மருந்து மருந்தை.

2. வள்ளிக்கொடி தாவிப் படரு மருந்து
வான்மின் கொடி மேவி யடரு மருந்து
புள்ளிமயில் சேவல் தொடரு மருந்து
பூமிசைச் சூர்தலை யிடரு மருந்து மருந்தை.

3. சரவண பவதாசன் சாற்று மருந்து
சனனமரண மாற்று மருந்து
இருவினை போக்கித் தேற்று மருந்து
எமன் வராமற்காப் பாற்று மருந்து மருந்தை.

வெண்பா.

31. தென்பழனிவேலன் றிருநீற்றைக் கைக்கொண்டேன்
என்பிறவித்துன்பம்விட்டே யேகினேன்-அன்புடனே
பாடினே னன்னன்பொற் பாதமல ரென்முடிமேற்
சூடினேன் பெற்றேன் சுகம்.

கீர்த்தனம்-இராகம்-உசேனி-தாளம்-ஆதி.

பல்லவி.

எல்லாப்பிணியுந் தீர்ந்ததே - எனைப்பிடித்த
எல்லாப்பிணியுந் தீர்ந்ததே.

அநுபல்லவி.

பொல்லாச் சூரன்குலத்தைப்பொடித்தபோரூரன்பதம்
புந்தியிலோர் தரங்கனிந்து நினைக்கும்முனம் எல்.

சரணங்கள்.

1. சொல்லுமேழ்பவப் பிணியும்-உலகின்கண்
தோன்றும் நவநவப்பிணியும்
கல்லாக் கொடும்பிணியுங்-கலியாற் படும்பிணியும்
அல்லும்பகலு மனமிடியு மிடிப்பிணியும் எல்.

2. வஞ்சமாதர் தந்தபிணியும் - ஊழ்வினையின்
வலியினால் வந்தபிணியும்
துஞ்சுமரணப்பிணியும் - தோன்று ஜனனப்பிணியும்
அஞ்சுகள் வரானிதம்-அடையும்பிணி முதலா எல்.
3. விலங்கினால் வரும்பிணியும் - பறவையாதி
விஷஜந்து தரும்பிணியும்
சலங்கொள் சத்துருவேந்தர் தம்மாலெய்தும்பிணியும்
சரவணபவகுகன் ஷடாட்சர மகிமையால். எல்.

வெண்பா.

32. பிச்சை புகினும் பெருஞ்சீர் வரப்பெறினு
மிச்சையாங் காங்கேவந் தெய்திடினு—மச்சுதன்
மான்மருகன் வள்ளி மணவாளன் வெற்றிபுனை
வேன்முருகன் றண்மறவே மே.

லாவணி-இராகம்-ஹரிகாம்போதி-தாளம்-ஆதி.

1. சண்முக னடியிணை மறவாதே நாளும்
(மனதே) இந்த
சகந்தனி லினிவந்து பிறவாதே, பிறவாதே,
பிறவாதே, பிறவாதே பிறந், திறவாதே - சண்.
2. பெண் மயக்கந்தனை நாடாதே,
(மனதே) பொன்,
மண்மருள் கொண்டதிற் கூடாதே, கூடாதே,
கூடாதே, கூடாதே கூடி, வாடாதே - சண்.
3. தேக நிச்சயமென் றெண்ணாதே,
(மனதே) கொடுந்
தீங்கரும மொன்றும் பண்ணாதே, பண்ணாதே,
பண்ணாதே, பண்ணாதே அதை,நண்ணாதே-சண்.

4. சரவண பவன்றமிழ்ப் பொய்யாதே
(மனதே) அன்பர்
தமைத் தூறிநிந்தனைகள் செய்யாதே, செய்யாதே.
செய்யாதே, செய்யாதே, பகை, வையாதே-சண்.

வெண்பா.

33. அடியேன் பிழைக ளனைத்தும் பொறுப்பன்
கொடிநே ரிடைவள்ளி கோமான்—படியதனிற்
சேய்நிகழ்த்துந் தீங்கனைத்துஞ் செப்புங்காற் பெ
தாய்பொறுப்ப தென்னரிதோ தான். [ற்றெடுத்த

கீர்த்தனம் - இராகம் - காம்போதி தாளம் - ஆதி.

பல்லவி.

எல்லாப்பிழையும்பொறுத் தெளியேனையாள
வல்லாய் வடிவேலா

அனுபல்லவி.

கல்லாலடிக்குள்வளர் கண்ணுதற் கண்ணுதித்த
கந்தனேகுகனேநா னிந்த நாள் மட்டும் செய்த
எல்லா.

சரணங்கள்.

1. தந்தை தாய் மொழி கண்மறந்து மவர்களை,
நிந்தை செய்த பிழையும் காம
வெந்தழலின் மூழ்கி வேல்விழியாரைந
யந்து நின்ற பிழையும், தேவ,
ரந்தணர் முனிவோரை, வந்தனை செய்யாமற்ற,
விர்ந்ததில் வருபிழையும், மிகச்
சொந்தமிவ் வுடலென்று புந்திபாலகங் கொண்டு

துன்மார்க்கருடன் கூடிச் சுழன்றலைந்த
[பிழையும் எல்லா.

2. பொய்யுரை முதலைந்து பாதகமும் புரிந்து
போதமிழந்த பிழையும் இந்த
வையகத்தில் மிகவு நொய்யவரைப் பகைத்து
வருத்தத் துணிந்த பிழையும் கொடுந்
தீய்யனைய கோபத்தாற் பையர வெனச்சீறிச்
சினந்து திரிந்த பிழையும், மற்றும்
செய்த பிழையுமினிச் செயும்
பிழைகண் முதலா எல்லா

3. சரவண பவதாசனென்று பேரிட்டுக்
கொண்டுன் றனைத் துதியாப் பிழையும், அன்பாய்ச்
சிரவணஞ் செய்துன் னருசரிதப் புகழை
நாவாற் றின முரையாப் பிழையும் ஆதி
பிரணவப் பொருளாமுன் னரிய வாறெழுத்தைசெ
பிக்கா தொழிந்த பிழையும் ஒலி
அரவமணியுமுன்பொற் பதத்தன்பர்களைக்கண்டு
ஆசையுடனவர்பால் நேசம் வையாப் பிழையும். ()

வெண்பா.

34. செந்தில்வடிவேன்முருகாசெங்கணெடுமான்மருகா
அந்திபகல் போற்றுமடி யார்க்கருகா-விந்தைமயில்
வீராபோ ரூரா விமலா கடப்பமலர்த்
தாரா வெனக்குனரு டா.

கீர்த்தனம்-இராகம் - தர்பார் - ரூபகதாளம்.

பல்லவி.

கந்தசுவாமி நாதா என்னைக் கைதூக்கி யாள லாகாதா

அநுபல்லவி.

விந்தை மயின் மீதிலேறித் திருச்செந்தூர்
வீதிவரும் பிரக்கியாதனே, செம்பொற்பாதனே,
குழைக்காதனே. (கந்த)

சரணங்கள்.

1. திங்களிளம் பிறைகங் கையணிந்திடும்
சங்கரனுக் கொருபாலனே, கதிர்வேலனே, குண
சீலனே. (கந்த)

2. செங்கைச் சிலைமதன் றுங்கச் சுடர் முடிக்
கொங்கைக் குறமின்மணாளா, பத்மத்தாளா,
நீபத்தோளா. (கந்த)

3. கொந்த விழுங்குழற் செந்திருவின் மிக்க
சுந்தரத் தெய்வானைக் கருகா அரிமருகா,
எழில் முருகா. (கந்த)

4. சிவ சரவண பவன்றுதி செய்யும்
சேவற்கொடியேந்து கையனே, குமரையனே,
தூயமெய்யனே. (கந்த)

வெண்பா.

35. கண்டேன் பவக்கடலைக் காணே னிருவினைகள்
விண்டேன் பேரின்பசுக மேவினேன்-னண்டர்தொழ
திங்கண்மும் மாரிபெயுந் தென்னோர கப்பதியிற்
றங்குமுரு கேசனிரு தாள்.

கீர்த்தனம்-இராகம்-வசந்தா—ஆதிதாளம்.

பல்லவி.

தெரிசனஞ்செய்துகொண்டேன்-அடிபணிந்து-தெரி,

அநுபல்லவி.

தெரிசனஞ் செய்துகொண்டேன் திருவேரகப்பதியில்
வரிசிலைநுதலுமை மகனைக்குகனைத் (தெரி)

சரணங்கள்.

1. அருமாமறைப்பொருளை யரனுக்கருள்புரிய
குருவாயெழுந்தருளும் கோலத்தையடியேன், (தெ)

2. அண்டர்நறுமலர்கள் கொண்டுதினம்பரவுந்
தெண்டபாணியை யான் கண்டுகளித்து. (தெரி)

3. எடுத்த ஜன்மமீ டேறிடவே வரங்
கொடுத்தெனையாள் குறக்கொடிநாயகனை (தெரி)

4. மின்னுமுடியுமுக விகசிதகமலமு
மின்னருண்மழை பொழிந்திலகிய விழியும் (தெரி)

5. விரைநறுநீபத் தொடையணிதோளும்
அரனயனெடுமாற் கரிய பொற்றாளும் (தெரி)

6. பந்தவினைகளற எந்தை முருகேசனை
சிந்தைமகிழ்ந்து வலம் வந்துவணங்கித் (தெரி)

7. அரஹர அரஹர வென்று துதித்து
சரவணபவ மந்த்ரத்தை ஜெபித்துத் (தெரி)

வெண்பா.

36. ஊற்றைப் புழுக்குரம்பை யூனிறைந்த தோற்பை
காற்றை யடைத்த காகத்தைச்-சோற்றால் [யைக்
வளரும் மரத்தைச் சதமென்று மண்ணோர்
தளருவதேன் சாமிநா தா.

கீர்த்தனம்-இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

தேகத்தை நம்பாதே மனதே தேகத்தை நம்பாதே.

அநுபல்லவி.

மோகாந்த காரத்தில் முழுகிக் கிடந்து நித
மேகாந்த மோனத்தை யிகழ்ந்து மதிமயங்கி
தேகத்தை.

சரணங்கள்.

1. இப்புவி தன்னிலே, யப்புமேற் குமிழிக்
கொப்பிட்டறிவோர் சொப்பனமென்னும் தேக.

2. நாயு நரியுங்கொடும் பேயுங் கழுகுங்காற்
றேயும் வேளைநம தேயிது வென்னும். தேக.

3. பிரணவ மந்திர மருணகிரிக் கருளுஞ்
சரவணபவகுன் கருணை பெறாமல். தேக.

வெண்பா.

37. அன்னைபிதா தெய்வ மருட்குருமற் றுற்றதுணை
நின்னையலால் வேறுளதோ நீணிலத்தில்-மின்னவி
[டைக்
கொந்தார் குழல்வள்ளி கோமானே செந்தில்வளர்
கந்தா எனைவந்து கா.

கிருதி-இராகம்-ரீதி கௌளை-தாளம்-ஆதி.

பல்லவி.

என்றனைக் கைவிடாதே-முருகா

அநுபல்லவி.

உன்றன் மலர்ப்பதமே யுற்ற துணையெனக்கு என்.

சரணம்.

தாயுந் தந்தையு நீயே சற்குருதெய்வம் நீயே
ஆயும் பொருளேசர வணபவாநந்தா நீயே. என்.

வெண்பா.

38. உன்னையல்லா லிவ்வுலகி லுண்டோ துணையெனக்
தன்னைநிக ரில்லாத சண்முகா-மின்னவிரும் [குத்
வேலா மயூரா விமலா வுமைபிளைய
பாலா கடைக்கணருள் பார்.

கீர்த்தனம்-இராகம்-கர கரபிரியை-தாளம்-ரூபகம்.

பல்லவி.

கிருபை செய்யத் தருண மிதுவே.

அநுபல்லவி.

திரிபுர சுந்தரி மனமகிழ்ந்தருள்
செங்கைவேல் முருகா, இப்போ. கிருபை.

சரணங்கள்.

என்தன் மனத்துயரந் தவிர்த்தருள் விந்தைப்
பொன் மயிலா, இப்போ கிருபை.

திரைமணி நித்திலங் கொழித்திடுஞ்
செந்திலம்பதியாய், இப்போ கிருபை.

சிவ சரவணபவன் றுதிசெய்யுஞ்
செங்கண் மான்மருகா, இப்போ கிருபை.

வெண்பா.

39. நெட்டிலைவே லாயுதனே நின்வரைத்தோ ளின் [மேலோர்
மட்டலவுங் கூந்தன்மங்கை மாலாகிக்-கட்டவிழும்
பூந்தா ரணியாள் புசியாள் விழிதுயிலாள்
சேர்ந்தாண் டவட்கருணீ செய்.

சிவசுப்ரமண்யர் பஜனைக்கீர்த்தனை.

பதம்-இராகம்-பூரி கல்யாணி-தாளம்-ரூபகம்.

பல்லவி..

முருகா உன்றன்மீது, மோகமானு ளோர்மாது.

அநுபல்லவி.

உருகி உருகி யனல் மெழுகானுள்
ஓகோவினித்தாளாள்மயில் வாகா துரி தமாய்வந்திடு-மு

சரணங்கள்.

1. கண்ட நாண் முதலாக (உனை)—மயல்
கொண்டோர்நாள் யுகமாகக்
கழித்து மதியைப் பழித்து என்றனைக் கசந்தே
ஏசுருளுன் புகழ், இசைந்தே
பேசுருள் ஷண்முக முருகா.

2. அன்னந்தண்ணீ ராருந்தாள்— மலர்.
அணைமீது சற்றும் பொருந்தாள்
சொர்ணச்செந்தளி ரெழின்மேனியள்,
வரிவேல் விழிமடமானவள்,
எரிபோல் மதன்கணை தூறிட— முருகா.

3. எண்டிசை புகழ்வேலா —என்போ
லேழைகட்கனு கூலா
தண்டமிழ் பாடுஞ் சரவணபவ
தாசற்கருள் சுரந்தேமிக,
வாசக்கடம்பணிந்தோங்கிய— முருகா.

வெண்பா.

40. பிறவா திருக்கப் பெறலாம் பிறக்கி
னிறவா திருக்கவா மெய்த—குறமாதின்
சந்தமண மார்புதோய்த் தன்னிகரில் லாச்சுடர்
கந்த னடிதொழுதக் கால். [வேல்

கீர்த்தனம் - இராகம் - சங்கராபரணம் - தாளம் ஆதி.

பல்லவி.

வேலனை மறவாதே-வடி வேலனை மறவாதே

அநுபல்லவி.

நாலுமறைகள் கிடந்தோல மிட்டறியாத
சோலைமலையிற்சிவ பாலனைக் கதிர்வடி வேலனை.

சரணங்கள்.

1. நெஞ்சில் நினைத்த தெல்லா முன்கைகூடும்
நேருந்துன்பங்கதிர்முன் பனியெனவோடும்
சஞ்சல மனதினில் வேரறச்சாடும்
தன்னியனுபூனை யாக்கியேபோடும். வேலனை.

2. ஆறெழுத்தோ துவர்க்கில்லை யப்பயமே
அவர் செலுமிடமெல்லாம் கொடுத்திடும்ஜயமே
வேறு தெய்வங்களில்லை நம்பு நிச்சயமே
விண்ணுமண்ணும் சுப்ரமண்யன் தன்மயமே
வேலனை.

வெண்பா.

41. எப்போது கூற்றெருமை யேறி வருவானோ
அப்போது வந்தெனைநீ யாதரிப்பாய் முப்போதுஞ்
செங்கணெடு மான்வேதன் றேவர்கள் போற்றும்
மங்கைகுற வள்ளி கணவா.

கீர்த்தனம்-இராகம்-சுருட்டி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

கருணை வைத்தெனை யாளவேணும்
கந்தசுவாமிநாதா. (கருணை)

அநுபல்லவி.

அருணகிரி நற்கீரன் பொய்யாமொழி
அருந்தமிழ்ப்பா மாலையணிமார்பா (கருணை)

சரணங்கள்.

1. வள்ளிக்கொடி தெய்வானைபிருபுற
மருவ வளருங்குகனே - அன்பர்
உளத்திருந்தவர்க்கருள்புரிந்திட
நகற்றுஞ்சிவஷண்முகனே
தெள்ளமுதமொழி வஞ்சியர்கள் வலை
சிக்கித்தினந்தடுமாறி யுழன்றிடும்
கள்ளமனக்கொடியோனென்றெனையுன்னிக்
கைவிட்டிடிலையோ-காணேன் வேறேதுணை (கரு)

———

வெண்பா.

42. செய்ய நிறத்தானைச் சேவற் கொடியானைத் [லாம்
தையல்வள்ளி குஞ்சரிக்கி சைந்தானை—வையமெ
தந்தவனைச் சீரலைவாய்ச் சண்முகனைச் சங்கரிதன்
மைந்தனைநீ நெஞ்சகமே வாழ்த்து.

கீர்த்தனம் - இராகம் - பந்துவராளி-தாளம்-ஆதி.

பல்லவி.

கடைக்கண்ணாற் சிறிதெனைப்பாரும் என்றன்
கலிமுழுதுமிப்போ தீரும்-அன்பாய் (கடை)

அநுபல்லவி.

படைக்கும்வேதனிரு பந்தனையிடும்வேலா
பண்டவனருஞ்சிறை பண்டருளெனுமுரை
கொண்டு வருநந்தியை-வெகுண்ட குருபரனே
(கடை)

சரணங்கள்.

1. கருணைப் பெருங்கடலே நின்னை-யன்றிக்
காணேனே வேறு துணையின்னை
தருணமிதெனையாள-தயைசெய்பன்னிருதோளா
தந்திமுகனுக்குப்பின்-வந்தவுணர்முடிகள்
சிந்த வடிவேலெய்து-வந்த முருகையனே (கடை)

2. பொன்னுலகம்புரந்தமூர்த்தி-சசி
மின்னருமங்கல்யம் சொலுநின்கீர்த்தி
முன்னொரு வணிகமாதுள்ளக்கரமுதவு
முருக முருகவென-உருகுமடியார்வினை
கருகவரந்தருக-வருகுமரகுகனே (கடை)

வெண்பா.

43. நெஞ்சினினைக்குமுன்னே நீலமயி லேறிவந்
தஞ்சலென் றேயென்னை யாதரிப்பாய்-மஞ்சுதவழ்
பொன்னெடும் பன்மதில்சூழ் போரூரில் வாழ்
மன்னு வடிவேல வா [குறிஞ்சி

கீர்த்தனம் - இராகம் - தோடி தாளம் ரூபகம்.

பல்லவி.

ஓடியென்றன் முன்னேவருவாய்
ஒரு நொடிக்குள் விரைவாய்.

அநுபல்லவி.

தேடியமார்பணிய
செந்திலம்பதியமர்ந்த கந்தாகுகா (ஓடியே

சரணங்கள்.

1. திருமகள்வாணி யுமையருள்தோற்ற
ஜகதலமுற்றும் பணிந்துனைப்போற்ற
இருவினை துன்பத்தினின்றெனைத்தேற்ற
என்றன்மனோரத முற்றுமீடேற்ற (ஓடி)

2. தெய்வப்பிடிகுறக்கொடியருகிலங்கத்
திகழுமுடிகோடிபிரவியிற்றுலங்க
கையில்வேல் கண்டசுரர் குலங்கலங்கக்
காலிற்சிலம்பு சதங்கைகள் குலுங்க (ஓடி)

3. நொய்யவடியவென்மீதி லோவாது
நோன்பிலனென்றெனைத் தள்ளப்போகாது
ஐயவுனையன்றி வேறு துணையேது
ஆ! இத்துன்பஞ் சகித்தன் முடியாது (ஓடி)

4. வரைத்தடமார்பின் மணிவடமாட
மைந்தன் சரவண பவன்றமிழ்ப்பாட
கரத்தலங்கூப்பியடியார்கொண்டாட
கதிர்முன்பனிபோலென்றன் கலியோட (ஓடி)

வெண்பா. [யிலே

44. கும்பம் படைத்தகொங்கைக் கோதைமார் மாயை
வெம்பும் படிக்கென்னை விட்டாயே -நம்புமவர்
எழ்பிறவி யுந்துணைபா யோகத் திருப்பதியில்
வாழ்குமர வடிவேல வா

கீர்த்தனம்-இராகம்-தாளம்

பல்லவி.

வாவாவாவா வள்ளிமனோகரா

அநுபல்லவி.

தேவாதி தேவர் தினம் தினம்வந்தடிபரவும்
தென்னேரகத்தில் வளர் மின்னயில்வேற்குமரா (வாவா)

சரணங்கள்.

1. வஞ்சக்கலிவலியால் நெஞ்சினேர்ந்திடும்பெருஞ்
சஞ்சல மொழிந்திட்ட தஞ்சமென்றடியன்முன் ()

2. ஆண்டாறேழாகியும்-காண்டிலேனொரு நலம்
வேண்டும்வரங்களளித்தாண்டருளவிந்நேரம் ()

3. இந்துமுகமாதை நினைந்துநைந்துருகியே
செந்தழலின் மெழுகா மைந்தன் குறைகள்தீர்க்க ()

4. நீயே கதியென்றெண்ணி நாயேனுனைநம்பினேன்
வேயேயனதோளுமை செயேயென்றனைக்காக்க ()

வெண்பா.

45. இன்னமொரு குறப்பெண் ணெய்துமென்றோ [வேலாநீ
மன்னுவரைகுன்றோடி வாடுகின்றாய்-சொன்னேன்
மலையாவு மோமூன்று வையகத்தும் கிட்டாள்
அலையா தெனுள்ளத் தமர்

கீர்த்தனம் - இராகம் - தாளம்

பல்லவி.

குருபரகுகனே-நின்பொற்கை
கொடுத்தாள் ஷண்முகனே (குருபர)

அநுபல்லவி.

திரிபுரமெரித்தோனருள்பாலனே
திருப்பரங்கிரியில் வளர்வேலனே
அருமறைபிரமற்கருள் சீலனே
அபயமென்றடுத் தோர்க்கனுகூலனே (குருபர

சரணம்.

நித்தியாநந்தவைகுந்தமுகுந்த
நெடுமால்மகிழ்மருகா
நேரிழைவள்ளிக்கும் ஐந்தருக்கான
நிழற்கொடிக்கும் அருகா
சித்தியானைமுகனுக்கொருசோதர
செந்திலம்பதியுவந்தக்ருபாகர
பத்திசெயுமடியார்கள் பவஹர
படியினின்பொற்பதம் நம்பினேன் ஓம்ஹர
(குருபர)

வெண்பா.

46. கைக்கணைவே னிற்குரிசிற் காய்போர்த் தொழிற் [கபர்ந்தாள்
மைக்கணைவே லுக்கிணையா மாதயிலா-விக்கணமே
செல்லுஞ்செல்லும்மவனைப் புல்லும்புல்லும்மதனை
வெல்லும்வெல்லும்விரை வில்

கீர்த்தனம்-இராகம் தோடி-தாளம் ரூபகம்

பல்லவி.

கந்தாவரந்தாதா-உன்-செந்தாமரைப்பதந்தொழ

அநுபல்லவி.

இந்திராதிவானவர்பணி
வாகமுருகாவெனக்கிரங்கி (கந்தா)

சரணம்.

வேலவனின்றுணைப்பதந்துணை
வேறோர் துணையுநான்காணேன்
பாலன்சரவணபவதாசன்
பற்பலகோடிஜன்மமெடுப்பினும் (கந்தா)

வெண்பா.

47. கரும்புஞ் சுரும்புமெழிற் காமலரு மிங்கே
திரும்பா மடாமதனை துள்ளேல்-விரும்பியே
வந்தான்குறக்கொடிக்கு வாய்த்தமணவாளன்றான்
றந்தான் கடப்பமலர்த் தார்.

கீர்த்தனம்-இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி

பல்லவி

வருவார்-வருவார்-வருவார்
மனதினில் மயங்காதே சகியே

அநுபல்லவி

திருவேரகத்தில்வளர் செல்வக்குமாரிப்போ
மருமலர்மாலைசூடி வர்ணமாமயிலேறி (வருவார்)

சரணங்கள்.

1. முல்லைமலருமுன்னே முழுமதியெழுமுன்னே
செல்லுஞ் செங்கதிருமேற்றிசைக்கடல்விழுமுன்னே
(வருவார்)

2. கள்ளவிழுந்தனிதோயுங் கடப்பமலர்த்தொடை நீ
தெள்ளமுதமொழியாய் சேரத்தொடுக்குமுன்னே ()

3. சரவணபவாநந்த தாசன் தமிழ்க்கருளும்
வரிவிழிக்குறமடமாதொரு பங்கனிப்போ (வருவார்)

வெண்பா.

48. வேத முடிமீதும் விண்ணோர் முடிமீது
நாத முடிமீது நயக்குமே-பாதிப்
பிறைபைச் சடைமுடித்த பெம்மா னருளு
மிறைவன் மலர்த்தா ளிணை.

கீர்த்தனம்-இராகம்-தன்னியாசி- தாளம்-ஆதி

பல்லவி

சத்திவடி வேலா-பத்தரானுகூலா

அநு பல்லவி.

சத்திவடிவேலா பத்தரானுகூலா
நித்தனருள் பாலா-முத்திநல்குஞ் சீலா சத்தி.

சரணங்கள்.

1. அருமறை போற்று மறுமுக தூயா
திருவின்மிக்கெழில் வள்ளி தெய்வானை நேயா
சத்தி.

2. பிரமனைச் சிறையிட்டு-பிரணவப் பொருளன்று
பரமனுக்கோதுவோய்-பரிந்தெனைக்காவின்று சத்தி.

3. அரவணைச் செல்வ-னரிதிரு மருகா
சரவணபவதாசன்-தமிழ்க்கருண் முருகா சத்தி.

வெண்பா.

49. அரிதுநெஞ் சக்கவலை யாற்றலே வெஞ்சூர்ப்
பொருதுவென்றிவாகை புனைவோய்-பெரிதுவந்து
கொண்டாடி நின்றுள்க மேனைசித்துக் கூறுத
சண்டாள மாந்தர் தமக்கு

கீர்த்தனம்-இராகம்-சங்கராபரணம்-தாளம்-ஆதி.

பல்லவி

வேலாயுத, வேலாயுத, வேலாயுத, சரணம்.

அநுபல்லவி

கோலாகல மயில்வீரா
குறமாமகள் மகிழ்லோலா. வேலா

சரணங்கள்.

வேதாகமப்பொருளே, ஸ்வாமி
நாதாவெனக்கருளே. வேலா.

செந்தாமரைப்பாதா
மைந்தா குழைக்காதா. வேலா.

வையாபுரிவாசா க்ருபை
செய்யாய் பவநாசா வேலா.

திருவாவினன்குடியாய் சுடர்
அருமாமணிமுடியாய். வேலா

சரவணபவகுகனே சிவ
குருபரஷண்முகனே. வேலா

---

50. கீர்த்தனம்-இராகம்-மத்திபமாவதி-தாளம்-ஆதி.

பல்லவி.

பூசனை யன்பாய்ப் புரிவோமே - ஜக
தீசனுமையாள் முருகேச னடி பணிந்து பூசனை

அனுபல்லவி.

மாசறக் குளிர்புனல் வாநதி படிந்தாடி
தேசு பெறத் திரு வெண் ணீறணிந்து
ஆசை நேச விசுவாசமுடன் குகனை
ஆவா கனஞ்செய்தருள் பெறவே பூசனை

சரணங்கள்.

1. அருக்கிய பாத்திபமளித்தாசனமிட்டு
இருக்கு நால்மறை மந்திரமோதி
முருக்கிதழ்வனக்குற மினுக்குந்தெய்வப்பிடிக்கும்
விரைக்குரவணி மலைக்கிறைவனுக்கும் பூசனை

2. கங்கையமுனை கோதாவிரி சரஸ்வதி
துங்கபத்திரை நர்மதை க்ருஷ்ணை
சங்கெறிதண்காவிரி தாம்பிரவர்ணி
பொங்குந் தெய்வநதிப் புனலாட்டி. பூசனை

3. ஆவினைந்தமுதைந்தொடு பால்தயிர்
கோவின் னெய்தேன் கரும்பு குளிரிளநீர்
மாவிளாந்தீங்கனி வருக்கவிரசத்தானந்
தேவினைத்திருமஞ்சன மாட்டி பூசனை.

4. தூயவெண்டுகில்கைக் கொண்டாகந்துடைத் தொளி
சொர்ணப்பட்டாடை மகிழ்ந்தரைக்கிசைத்து [ருஞ்
சேயினெத்திவிளங்கத் திருநீறணிந்து செம்பொன்
திகழுமுப்புரியுத்தரியஞ் சாற்றி. பூசனை.

5. எண்ணிறந்தபன் மணியணி புனைந்தெழில்
இந்துநுதலிற் சிந்துரந்தீட்டி
தண்ணறுவிரைச் சந்தனந்திமிர்ந்து நல்ல
சாலியச்சோபனக்ஷதை தூவி. பூசனை.

6. தாதகிமுல்லை செந்தாமரை மல்லிகை
சண்பகமலர்க் கடம்பிருவாட்சி
போதலர் ஏனைய நாண்மருமலர் வில்வங்கொடு
ஆதரவுடனுயிர நாமஞ்சொலி. பூசனை.

7. இன்னிய முழங்கத்தசாங்க தூபங்கொடுத்
தெழிலணிமணித் தீபங்களாற்றி

தன்னிகரில்லா வெற்றித்தனிவேலனியு மெங்கள்
சண்முககுருபரனடி சார்ந்து. பூசனை.

8. சென்னலரிசியடு நீஞ்சுவைப்பாலன்னம்
சித்ரான்னம் கிருதகுளபாயசமும்
கன்னல் முக்கனி சருக்கரை தேன்கற்கண்டு
மின்னுஞ்சிற்றுண்டி பலவினிதமைத்து பூசனை.

9. வெள்ளிலை யடைக்காயளித்து மின்பொற்சிறைப்
புள்ளிமயின்மேலெங்கை பொலியவைத்து
வள்ளிக்கொடிகுஞ்சரி மகிழ்ந்திருபான்மருவ
உள்ளமுருகக்கண்டுவந்தேத்தி. பூசனை.

10. அணியணியாவமைத்த அலங்காரதீபமெடுந்
தாலத்திசுற்றி மற்றுமுபசரித்துப்
பணிகொண்டெனை யாளெனப்பன்முறை வலம்வந்து
பஞ்சாங்க வட்டாங்க முறைதாழ்ந்து பூசனை.

11. துதிபலபல சொலிச்சிரமேற் கரங்குவித்து
தொன்மறைவழி நிதந்தொழுதேத்தி
கதியின்மதியைவைத்து கருத்தொருமித்திருந்து
கந்தனுறெழுத்தினைக் கனிந்தோதி. பூசனை.

12. பரவவருள்சுரந்து பன்னிருகைக்குமரன்
பல்வரமளித்திடப் பணிந்தேற்று
சரவணபவாநந்ததாசன் தமிழையோதி
சந்ததம்குகன்றிருவடி வாழ்த்தி. பூசனை.

51. மங்கள-ஆரத்தி-இராகம்-முகாரி-தாளம்-ஆதி.

பல்லவி.

மங்கள ஆரத்திமகிழ்ந்தெடுப்பாம்
மன்றலந்தொடைசீப மார்பமகீபனுக்கு

அனுபல்லவி.

துங்கமாமறைபரவுஞ் சோதிசுரூபனுக்கு
எங்கள்குடியடிமை யேற்றபிரதாபனுக்கு.
மங்களம்.

சரணம்.

1. அருவுருவாண்பெணலியான முதல்வனுக்கும்
திருவேரகத்தினுமை செல்வப்புதல்வனுக்கும். மங்
2. மண்புனலனல் வளிவானொளியானவற்கு
கண்மணியொளி யெனக் கருத்துயிரானவற்கும்.
ஒருருமூவுரு வானவொருவனுக்கு
தாரணிபோற்றுஞ்சிவ சரவணபவனுக்கு மங்க.

52 நலுங்கு-இராகம்-நாதநாமக்கிரியை

தாளம்-அடதாளசாப்பு.

பல்லவி.

நலுங்கிடவாரும்-முருகேசா-நலுங்கிடவாரும்

அநுபல்லவி.

நலுங்கிடவேவாரும் நவரத்நமேடையில்
துலங்குங்குறவள்ளி தோகைகுஞ்சரியுடன் நலு.

சரணங்கள்.

மருமலர்சூடி-திரு
மாலயன்தேடி
சிரமலர்ப்பதங்காணுஞ் சிவன்பாலாவிங்கேகூடி
சரவணபவதாசன் தமிழ்தனையேபாடி நலுங்கிட.

41. இராகம்-சங்கராபரணம்-தாளம்- ஆதி.

கஸ்தூரி சவ்வாது கமழ் பனிநீர்ஜாதிமுல்லை[தார்.
விஸ்தாரமாகவே விண் மெல்லியர்கள் கொடுவந்

53 இராகம்-மத்தியமாவதி-தாளம்-ஆதி.

சிங்காரவடிவேலா சேராய்மணவறையில்
துங்கமதிமுக குஞ்சரிதோகை நலுங்கிடவே.
சரவணபவதாசன் தமிழ்க்கருள்புரியும்
வரசண்முகவாவிப் போவாரும் நலுங்கிடவே.

திருவூசல்—இராகம்-பைரவி.

சுந்தரஞ்சேரறு கோணவீட்டினுள்ளே
துலங்குநல்லற முதனூற்கால்கணாட்டி
முந்துசரிதை கிரியையோகஞான
முகடணித்துச் சாதனச்சங்கிலிகள்பூட்டி
சந்தமனவொண்படிகப் பலகைமீது
சண்முக நீ மகிழ்ந்தினிதுவீற்றிருக்கச்
சிந்தைகனிந்துள்ளன்பாலடியனீர்க்கத்
திருச்செந்தினயகரேயாடீரூசல்.

(தெய்வானைவள்ளியுட னுடீரூசல்.)

54. லாலி-இராகம்-சங்கராபரணம்-தாளம்-சாப்பு.

1. பிஞ்சுமதிநதி புனையும் பிஞ்ஞகன் கண்வந்து
துஞ்சவுணர் களைவதைத்த தூயவடிவேலா லாலி.
2. வஞ்சிகுறவனிதைமன முருகவனமேகி
இன்சொல், சொலிகொஞ்சியணைந்
தின்பமுறுமுருகா லாலி.
3. மஞ்சுதவழ்பரங் கிரியின்வந்தமரர்தொழவே
குஞ்சரியை மணம்புரிந்த குமரகுருநாதா லாலி.
4. அஞ்சிறைப் புள்ளிமயிலேறி யுனதடியார்
நெஞ்சினினினைக்குமுனம் நேர்வந்துநிற்போய் லாலி

45. ஓடம்-இராகம்-புன்னாகவராளி.

ஏலேலோ-ஏலேலோ-தத்தையா-ஏலேலோ-ஏலேலோ

சீர்மேவும் ஏரகம்வாழ் சிவசுப்பிரமண்யனிரு
ஏர்மேவும் மலர்பதத்தை (தத்தையா)
இறைஞ்சியனுதினஞ்செனம
கார்மேவுங் கடல்கடப்பக் கருதுமன்பர் புயஞ்சுமந்து
பார்மேவுங் காவாடிகள் விதம் பகருகிறேன் இனிதாக.

(முடுகு)

பேர்மேவு பால் தயிர் நெய் பேசுவாலன்னம்
பெருமிதத்தேன் சருக் கரை தீங்கற்கண்டு
நார்மேவுமுல்லை முதற் றாய நறுமலர்கள்
நல்லகனிவருக்கங்கள் சொல்லப்போகாது
நேர்மேவுபுனல் கருப் பூரஞ் சாம்பிராணி
நேசமுடன்பூசும் வி பூதி ருத்திராக்ஷம்
தார்மேவுபவளம் வெண் டரளமாணிக்கம்
சந்தனம் புனுகு சவ் வாது கஸ்தூரி
நீர்மேவு மீனினம் வாரணங்கோழி
நீடுலகம்புகழ்வர்ன பட்டெழின்மகமல்
வார்மேவுநகில்வள்ளி தெய்வானைமருவும்
வரைத்தடந்தோள் முருக வள்ளலைவாழ்த்தி
சூர்மாவுங்குன்றமுந் துளைத்தநெடுவேலைத்
தோகை மயிலைச்சிறைச் சேவலைத் துதித்து
தேர்மேவுநெடுவீதி கொள்ளாமல்நிறைய
சிறந்துவருங் காவடிக ளின்னம்பலவாகும்.

ஏலேலோ.

55. பத்தியம்.

ஜயஜயசண்முகா தேவதேவோத்தமா
திரிபுரசுந்தரியீன்ற செல்வமுருகா
ஜயஜயசண்முகா திவ்யதேஜோமயா

சிற்றிடைவள்ளி தெய்வானை நேயா
ஜயஜயசண்முகா செய்யபாதாம்புஜா
செப்பரியபிரணவோப தேசவேலா
ஜய்ஜயசண்முகா ஜீவதயாபரா
ஜகத்ரக்ஷகாவெனச் செப்பவறியாப் [து
பேதையுள்ளன்பிலே னெனினும் பிழைபொறுத்
ஆதிவடி வேலுங்கையு மாயன்புகூர்ந்து
நீலமயின்மீதுவந்தென் முன்னிற்பதென்றோ
நித்தியகல்யாண குணசீலசம்பு பாலா.

56. கதவுதிறக்கிற பாட்டு.

1. இந்துநுதல்வள்ளிக்கும் எழில்வேல் முருகனுக்கும்
இசைந்த ஏசலைத்தமிழ்பாட-முகம்
அசைந்தகரத்தான் பதம் நாட

2. முருகலர்ந்தளிதோயும்-முருகலர்கடம்பணி
முருகன் பொன்மயின்மிசை யோங்கியே-வள்ளி
விரகந்தன்னகமிசையோங்கியே

3. இளங்கதிர்போலமெய் விளங்கவே வடிவேலர்
ஏகமாய் வருகிறார் தானே-மிக
வேகமாய் வருகிறார்தானே.

4. திருச்செந்தூர் வேலர்வருஞ் செய்தியறிந்து வள்ளி
திடுக்கெனக் கதவடைத்தாளே-வெகு
முடுக்காகக் கதவடைத் தாளே.

* * *

5. கதவடைத்ததுகண்டு கந்தமலர்க்கையினால்
கந்தனன்பாயதைத்தொடவே-மகா
விந்தையாய்த்திறந்து விடவே.

6. மலரணைமீதிலே குலவிவள்ளிக்கொடியை
மருவியாநந்தங் கொண்டாரே-கந்தர்
சருவியாநந்தங் கொண்டாரே.

7. சரவணபவதாசன் சங்கீதம்பாடத்தேவர்
தண்மலர்மழை சொரிந்தாரே-கற்ப
விண்மலர்மழை சொரிந்தாரே.

ஏகாந்தம்.

57. இராகம்-ஆநந்தபைரவி-தாளம்-அடதாளசாப்பு.

1. எண்ணரியகோடி செங்கதிர்களொருங்கே
எழுந்தவெனவொளிருமணி மாடமதனில்.
2. மின்னவிர் சாம்பூநதச்சங்கிலிகள் பூட்டி,
விண்தருவினன்றலர்ந்த மருமலர்தூவி.
3. நன்னய மென்வெண்டுகில தன்மேலே வீசி,
நறிய மட்டிடப்பாலகிற் புகைக ளூட்டி,
4. சந்தவணி நிரைநிரையாய்ப் புனைந்தமைத்திட்ட,
சுப்பிரமஞ்சத்தின் முருகன்வீற்றிருந்தாரே.
5. வஞ்சி குறவள்ளி குஞ்சரியிரு வரும்.
வந்திறைவனடி பணிந்து வணங்கித்துதித்தார்.
6. கந்தனிருமங்கையரைக் கையாலணைத்துக்,
கட்டி முத்தமிட்டருகிருத்தி னாரே.
7. சந்தனம் புனுகுடன் ஜவ்வாது கஸ்தூரி,
தண்பனிநீர் விரவியே தன்கையாலள்ளியே.
8. மங்கையர் சீதளகளபப்புளகிதமார்பு
வலம்புரி சிறந்தகளம் கையிற் பூசியே.
9. போதலர்ந்தமல்லிகை முல்லையிருவாட்சி,
பூங்கொடியாரளகபாரத் தலங்கரித்தாரே.
10. செந்திருவின் மிக்கவெழிற்சிறந்த கன்னியர்,
சேர்ந்தன்வரைத் தோளினிற் களபம்பூசியே.
11. மன்றலந்தண்ணீபமலர் மாலைகள்சூட்டி,
மாரனைப்பழித்த வெழில் கண்டுமகிழ்ந்தார்.

12. பொற்றகடின்மிக்க நறும்வெள்ளிலைபாய்ந்து,
புதுப்பனிநீர் விரைகலந்தடைக் காயமைத்து.

13. தண்ணொளிமுத்தத் தினீத்தசுண்ணாந்தடவி,
தாம்பூலமவர்கள் மாற்றித்தாமளித்தாரே.

14. எந்திரத்திற்செய்த பொற்பதுமைகள்பாட,
எண்டிசைபுரளும் வெண்கவரிகள்போட,

15. தென்றலிளங் கொழுந்தசைந்து சென்று ஊடாட,
செந்திலம்பதி முருகனின்ப நுகர்ந்தான்.

16. சரவணபவாநந்தன் தமிழ் பெருகவே,
ஜயஜயவென்றமரர் மலர்மாரி பெய்தாரே.

58 தாலாட்டு-இராகம்-நீலாம்பரி

1. திங்கணதிசூடும் சிவனுதற்கண்வந்தவனே [னே
கங்கையுமைகார்த்திகைப்பெண் கண்கண்டுவந்தவ

2. உமைமடியில்வைத்தணைத்து உச்சிமுகந்திரண்டு
கொமைநகிற் பாலூட்டிக் கொஞ்சுபசுங்கிளியோ.

3. மலர்விழிக்குமையெழுதி வன்னத்துகிலுடுத்தித்
திலதநுதறீட்டி உமை சிந்தைமகிழ்வானமுதோ

4. வெள்ளிவிடையான்றேன் மேவியிளமழலைத்
தெள்ளமுதமன்னான் செவிக்கூட்டும்வான்குருந்தோ

5. காழியின்கண்வந்து கவிமாமழைபொழிந்து
பாழமணர்க்காய்ந்த பரசமயகோளரியோ

6. வணிகமடமாதிரங்க மங்கலநாணீந்தவனே
தணிகைமலையில்வள்ளி தன்னோடமர்ந்தவனே

7. செவ்வானுருவிலங்கச் சிறுவாணகையரும்ப
மைவேல்விழிக்குறமின் மயங்கவனம்வந்தவனே

8. கோலமயிலாடக் குயில்வண்டினம்பாடச்
சோலைமலை யமர்ந்த சோதிவடிவேலவனே

9. வேலிலங்கவாளிலங்க மெய்யில்வெண்ணீ றிலங்க
நீலமயிலேறி யன்பர் நினைக்குமுனம் வந்தவனே

10. ஆறுனனவென் றழைக்கு மடியவர்க்கு
மாறுக்கருணை மழை பொழியுங் கார்முகிலோ

11. படியளந்த மாயன் பரமனயன்மகவான்
முடியளந்ததாளென் முடி சூட்டவந்தவனே.

59. ஆநந்தசுகம்.

இராகம்-நீலாம்புரி.

1. சதுர்மறையே பொற்காலாச்சாஸ்திரங்கணவேணியா
அதிர்புராணுகமங்கள் அழகியநன் மேலணியா

2. சந்தத்திருப்புகழே தயங்குமணிச் சங்கிலியா
சுந்தரப்பொய்யா மொழிசொல் தூங்குமஞ்சமாவமை

3. பரவுமிசைநக்கீரன் பனுவநந்தாவிளக் கேற்றிச்[த்து
சரவணபவாநந்தன் தமிழ்மென்மலரணைமேல்

4. அருணகிரிவிற்றேன் றுசத்தி ஐந்தும்மருங்கணைய
கருணைத்திருவுருவே காந்தத் தினிதிருந்து

5. எண்ணெனன்கலைகளெல்லாமேவற்றெழில் செயவென்
கண்ணுண்மணியாகுங் கந்தனுக்கா நந்த சுகம்.

60. திருப்பள்ளியெழுச்சி.

கீர்த்தனை-ராகம்-பூபாளம்-தாளம்-ஆதி.

பல்லவி.

திருப்பள்ளியெழுந்தருள்வாய்
செந்தில் வேலா. திருப்பள்ளி

அநுபல்லவி.

மருப்புனைகடம்பணி வரைத்தடந்தோளா,
திருப்பரங்கிரிவளர் தெய்வானை மணவாளா-திருப்பள்ளி

சரணங்கள்.

1. செஞ்சூட்டஞ்சிறைச் சேவல்கள்கூவின
தினகரன்குணகடல் திசைவரைமேவினன்
குஞ்சூட்டும்புள்ளினம் பாடின ஆவினன்
குடிவாழெந்தை நீயோக வருள் துயிலுணர்ந்து
திருப்பள்ளி.

2. அந்தணர் வேதிய ரருமறை யறைந்தார்
அன்பர்கள்வந்திறைஞ்சி யடிதொழ நிறைந்தார்
இந்திராதி வானவர் தங்குறை யிரந்தார்
ஏரகப்பெருவாழ்வே யுன்றன் மனதிரங்கி திருப்

3. தம்புருவீணையாழ் கிம்புரி மீட்டி
தாளமத்தள மொன்றத் தகுஞ்சுருதிகூட்டி
தும்புருநாரதர் பாடினரிசை நாட்டி
சோலைமலையுவந்த சோதியருள்சுரந்து. திருப்

4. கொணர்ந்தனர் குளிர்நறும் புனல்நினையாட்ட
கும்பமுதலட்டமங் கலங்கள் முன் காட்ட
மணந்தருதீஞ்சுவை யமுதமினிதா யூட்ட
வளருங்குன்று தோறுடல் புரிவாயகமகிழ்ந்து திருப்

5. ஊதினசின்னம்பல் லியமெக்காளம்
ஓங்கிமுழங்கின பேரிகைமேளம்
ஓதினர்திருப்புகழ் பாடிப்பூபாளம்
ஓம்சரவணபவ தாசனின்னடிகாணத் திருப்

61. தெண்டகப்-இராகம்-பூபாளம்-தாளம்-திரிபுடை.

1. ஆதியந்தமில்லாதநிற்குண
அத்வய்தத்தனிவஸ்துவே
அகண்டபூரணசச்சிதானந்த
அமலசைதன்னியவஸ்துவே.

2. சோதியும் முச்சுடருமாகிய
சுயம்பிரகாசமெய்ப்ருமமமே
சுருதி முடிவினினடனமிடுகின்ற
சுகுணநிஷ்களப்ருமமமே.

3. மண்விண்புனலங்கிவாயுவாகினை
வளருமைம்பொறியாகினை
மண்டலம் மூன்றுகினை வள
ரெண்டிசை யுலகாகினை.

4. பெண்ணுடன்ணுகினை யன்றிப்
பேடியாகியு நின்றனை
பிறக்குமெழுவகைத் தோற்றமாகினைப்
பிறவியற்றுநீ நின்றனை.

5. குரவனுயுபதேசந்தந்திடக்
குமரகுருவெனவந்தனை
கூப்பிடுதூரத்திருந்தன்பர்
கூப்பிடுமுனம்வந்தனை.

6. சரவணபவதாசனைக்காக்கத்
தண்ணருள் கொடுவந்தனை
சகலவுயிருக்குந்தாெனாருதாயாய்த்
தந்தையாகியும் வந்தனை

62. கீர்த்தனம்-இராகம்-பிலஹரி-தாளம்-சாப்பு

பல்லவி.

பாடித்துதித்திலனே நின்னுமத்தைப்
பாடித்துதித்திலனே.

அநுபல்லவி.

ஆடுமயிலிலென்னன்னையருடன்வளர்
அழகா அழகா அழகாவென்றநுதினம்-பாடி.

சரணங்கள்.

1. தேவர்மனக்குறை தீர்த்துக் கொடுஞ்
சிறைவிட்டோர் முனிவனைக்காத்து
மூவர்க்கு முதலாகி மூவுலகும் புரக்கும்
முருகா முருகா முருகாவென்றனுதினம் - பாடி.

2. நாயினும் கடைப்பட்ட பாவி யாரும்
நடுங்கச்சினக்கும் பெருங்கோவி
கோயிற் புகுந்துமலர் கொய்துன்பதத்திற்றாவி
குகனே குகனே குகனேயென்றனுதினம் - பாடி.

3. உள்ள முருகிக் கண்ணீ ருதிர்த்து வாய்
உரை குழற மெய்விதிர்த்துக்
கள்ளங்கவடுநீங்கிக் கருத்துன்மேனிதம்வைத்துக்
கந்தா கந்தா கந்தாவென்றனுதினம் - பாடி.

4. ஆணவகாமியந்தீர்ப்பாய் சர
வணபவதாசனைக் காப்பாய்
வீணையாழ்தம்புரும்ருதங்கதாளத்துடனே
வேலா வேலா வேலாவென்றனுதினம் - பாடி.

63. மங்களம் - இராகம் - சுருட்டி - தாளம் - ஆதி.

பல்லவி.

சந்ததமங்களமங்களம் சண்முகனுக்கு
சந்ததமங்களமங்களம்

அநுபல்லவி

செந்திருநெடு மாலயனிந்திரன் விண்ணவர்களும்
வந்தடிதினப்பரவுஞ்செந்தில்வடிவேலனுக்குச்சந்ததம்.

சரணங்கள்.

1. அரனுதற்கண் வந்தவற்குக் கங்கையிற்சர
வணத்திடை வதிந்தவற்கு

பிரமனைமுனிந்தவற்குப் பிரணவப்பொருள்.
பேசியுரை தந்தவற்கு
அரியயனடுங்கவிளை
யாடல்செய்து வந்தவற்கு
விரிபுவன மெங்குமிசை
மேவியிருந்தவற்கு சந்ததமங்களம்.

2. தாருகனை மடித்தவற்கு அசுரர்குலந்
தாழ்வுறப் பொடித்தவற்கு
சூரனுயிர் குடித்தவற்கு அவனெடுத்த
தொலைவின் மாய முடித்தவற்கு
காரவுண னெய்த்துவந்த
கலாப நடித்தவற்கு
வாரணத்துவசமன
மகிழ்ந்து பிடித்தவற்கு சந்ததமங்களம்.

3. திருப்பரங்குன் றமர்ந்தவற்கு அமரர்தொழத்
தெய்வானையை மணந்தவற்கு
மருப்புனைதார் புரந்தரற்கு முடிபுனைந்து
வானுரிமை தந்தவற்கு
விருப்பொடு கான்மேவிக்குற
மின்னின்ப நுகர்ந்தவற்கு
கருப்பையிலுறாமலென்னைக்
காத்தருள் சுரந்தவற்கு சந்ததமங்களம்.

64. போற்றி விருத்தம்.

அஞ்சிறைத் தும்பி பாடுங் கொந்தவி ழளக பாரத்,
தஞ்சனந் தீட்டும் வேற்கட் சங்கரி யகமகிழ்ந்து, கொஞ்
சியே முகத்தணைத்துக் குலவும்பொற் சதங்கை வாய்ந்த,
செஞ்சிலம் பொலிக்குஞ் செய்ய சீரடிக் கமலம் போற்றி.

கடலமு தனைய வின்சொற் கான்குறப் பாவை யந்தத்
தடநகிற் சுவட மூந்தி ம்ருகமத படிரந் தங்கி
மடலவிழ் நீபத்திண்டார் மலிந்தகன் மார்பும் போற்றி
சுடரிலை நெடுவே லேந்துந் தோளிரண் டாறும்போற்றி.

செங்கதிர் கோடியென்னத் திகழ்மணி முடியுஞ் சேர்ந்த,பங்கய முகமோ ரா று பழுத்தவின் னருளினேக் கும்,புங்கவர்க் கபயமீந்து பொலிவுறு கரமும் போற்றி, திங்கள்வெண் குடையா ளுனுந் திருவெழில் போற்றி போற்றி. 3.

அச்சுதன் மருகா போற்றி ஆறுமா முகத்தோய் போற்றி, மெய்ச்சுநான் மறைகடேறு வெற்றிவேற் கை யாய்போற்றி, பச்சைமா மயிலி லேறும் பன்னிரு விழி யாய் போற்றி, இச்சகம் புகழ்ந்து போற்று மேரக வாழ்வே போற்றி. 4.

அன்றொரு மாது கூவ வற்றகை யளித்தாய் போற்றி சென்றுநான் மாடக் கூடற் சமணிருள் சிதைத்தாய் போற்றி,இன்றெனை யாளவந்த வென்னுயிர்த் துணையே போற்றி, குன்றுதோ றாடல் செய்யுங் குமரனே போற்றி போற்றி. 5.

உமையவண் மதலாய் போற்றி ஓமெனு முதல்வா போற்றி,இமையவ ரிடுக்கண் டீர்த்த வேதிலர்க் கேறே போற்றி, முமையுநற் றுணையே போற்றி முருகசுந் தர னே போற்றி,கொமைமத ரிளமென் கொங்கை குஞ்சரி மணாள போற்றி. 6.

கந்தனே போற்றி வள்ளி காந்தனே போற்றி கங் கை, மைந்தனே போற்றிகண்ணன் மருகனே போற்றி வேத, மந்திரப் பொருளா ரற்கு மகிழ்ந்துரைத் தவனே

போற்றி, சந்தத மெனையாட் கொள்ளும் ஷண்முகா போற்றி போற்றி. 7.

செங்கையி ராறுய் போற்றிச் சேவலங் கொடியாய் போற்றி, எங்கணு நிறைவாய் போற்றி யென்மனத் துறைவாய் போற்றி, பங்கயற் சினந்தாய் போற்றி பனிக் கடன் முனிந்தாய் போற்றி,ஐங்கரன் றுணைவா போற்றி ஆவினன் குடியாய் போற்றி. 8.

சச்சிதா நந்தா போற்றி சயயமா ருனுய் போற்றி, இச்சையொன் றில்லாய் போற்றி எண்குணத் தவனே போற்றி, அச்சுதன் மருகா போற்றி அடியவர்க் கெளி யாய் போற்றி,பச்சைமா மயிலா போற்றி பரமனே போற்றி போற்றி. 9

சுத்தநிர்க் குணனே போற்றித் தூகளிலா வொளி யே போற்றி,தத்துவப் பொருளே போற்றி சரவண பவ னே போற்றி, மூத்தொழி லிசைப்பாய்போற்றி முதன் முடி வற்ருய் போற்றி,நித்தனே போற்றி போற்றி நிம லனே போற்றி போற்றி. 10.

65. நாமாவளிகள்.

1. லம்போதர, லம்போதர
லம்போதர, ஹர ஹர

2. சங்கர சங்கர உமாபதே - சிறு
திங்களணிந்திடுங் கிருபாநிதே

3. சுப்பரமண்யஜனனி- திரிபுர
சுந்தரிகல்லியாணி-பால

4. ஓம் சிவசரவணபவ குக வேலனே
உமையவள் மனமகிழ் அருமைப்பாலனே

5. சரவண பவ குக ஷண்முகனே
முரகரி சோதரி தன்மகனே

6. சேவலாடுங் கொடி வேலனே - வள்ளி
காவலான சல்லோலனே

7. ஆதி சுந்தரி செல்வனைத், தொழு
மேதெனக்கினி வல்லினே

8. குஞ்சரி மணவாளா - உன்றன்
தஞ்சமெனே யாளாய் - தேவ

9. குமராக்ரவுஞ்ச மர்த்தன ஷண்முக
குக்கிட தர சிகிவாகன

10. ஹர ஹர ஹரஹர ஷண்முகனே - திரி
புரை மன மகிழ்ந்தரு ளும் மகனே

11 சத்தி வேலாயுதந் தரித்திடும் கையா
சரவணப் பொய் கையி லுதித்திடு மெய்யா

12. அருமறை போற்றிய குருபர நாதா
அபயம் அபய முனதடியிணை தாதா

13. சுடரிலை நெடுவேவ லேந்திய கையா
தோகை குஞ்சரிமன மகிழ் முருகையா

14. சாமிநாத குக ஷண்முக சரணம்
சடுதியி லெனக்கருள் தந்திட வரணும்

15. சரணம் சரணம் குக ஷண்முக தேவா
தருணம் தருணமெனைத் தற்காக்க வாவா

16. சத்துரு சங்கரா மெய்த்தனி வடிவேலா
சமயமாறுங்கடந்த ஷண்முக பாலா

17. சாமி மலையில்வளர் சற்குருநாதா
பூமி புகழும் உன்றன் பொற்பதந் தாதா

18. வேலா, வேலா, வேலா, வடி
19. காங்கய சரணம், சரணம் காங்கேயா
20. வெற்றிவேலா, வெற்றிவேலா
வெற்றிவேலா, கதிர்வடி
21. சரவணபவகுக ஷண்முக தேவா
தருண மெனக் குனருள் தந்திட வாவா
22. முருகையனே, முருகையனே
முருகையனே, பன்னிருகையனே
23. வேலாயுத, வேலாயுத
வேலாயுத, கதிர்வடி,

குருஸ்துதி-கீர்த்தனம்-இராகம்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

சரணம் சற்குருநாத நின்பொற்பதம்
சந்ததம் எனையாளுவாய்.

அநுபல்லவி.

கருணையோருருவா யெழுந்தருளிக்
கன்ம மலபரிபாகங் கண்டருள்புரிவோய் சரணம்

சரணம்.

அலைகடல் துரும்பா யலைந்துழலும்
ஆன்மகோடியாணுவகாமியமாற்றி
உலைபடுமெழுகா யுளமுருக்கி
உய்யுமாறொரு சொல்லுவந்தருளுவோய்— சரணம்

வாழி.

சீர்பெருகுநெட்டிலைக் கூரயில்வேல்வாழி
சித்திரக்கலாபமயில் சேவல்வாழி
பார்பரவு வீரரொன்பதின்மர்வாழி
பதியாறுவாழி நான்மறைகள்வாழி
வாரிலகுமதரிளமென் களபக்கொங்கை
வாரணப்பொற்பாவைகுற மங்கைவாழி
தாருலவு புயமீராறுடைய வள்ளல்
தண்கமலச்சீரடி நீடூழிவாழி.

வேதாந்த நூல்கள்

ஸ்காந்த புராணம்	...			
திருக்குறள்	...			[illegible]
பெரிய புராணம்			0	0
ஆத்மஞான ரெத்நம்	...	2	0	0
அருள் மொழிகள்	...	1	8	0

துப்பறியும் நாவல்கள்

சுந்தர்சிங் பாஸ்கர விலாஸ் படுகொலை	...	1	8	0
குலசேகரன்				
துப்பறியும் சிறுவன்	...	1	0	0
சித்ரரேகை	...	1	8	0
பத்மாக்ஷி	...	2	0	0
வீரகேசரி	...	1	12	0
ஷண்முக சுந்திரம்	...	2	0	0
கமல நாதன்	...	1	8	0
பத்மரேகை	...	1		0

பி. டி. பாணி அண்டு கம்பெனி,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

P. Shunmugam & Co., Mount Road, Madras.